
பொதுசன நூலகம்

விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka




# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: பதின்னான்கு

சங்கு 10 வள்ளுவர் ஆண்டு 2039 மார்கழி 20 ஞாயிற்றுக்கிழமை (04.01.2009) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 016

## தலைவர் பிரபா தென்னாபிரிக்காவுக்கு தப்பிச் செல்வாராம்

# வன்னிப் போரை அடுத்து புலிகள் தமிழகத்திற்குள்ளும் ஊடுருவலாம்!

## இந்தியப் புலனாய்வுத்துறை வெருட்சி

(டெல்லி)

கிளிநொச்சியை படையினர் கைப்பற்றியதை அடுத்து தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரன் தென்னாபிரிக்காவுக்குத் தப்பிச் செல்வார் என்றும் விடுதலைப் புலி உறுப்பினர்கள் தமிழகத்திற்குள் ஊடுருவலாம் என்றும் இந்திய புலனாய்வுத்துறை எச்சரிக்கை செய்துள்ளது. (14ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளின் எறிகணை மழையில் 12ஆயிரம் படையினர் படுகாயம்



### சரத் பொன்சேகா ஒப்புதல்

(கொழும்பு)

வன்னிப் போர்க்களத்தில் தமிழீழ விடுதலைப் புலிகள் நடத்திய எறிகணை மழைத் தாக்குதலால் அதிகாரிகள் உள்ளிட்ட 12 ஆயிரம் படையினர் படுகாயமடைந்து விட்டதாக இராணுவத் தளபதி சரத் (14ஆம் பக்கம் பார்க்க)


## கோட்டையில் குண்டு வெடிப்பு மூவர் காயம்; 7 வாகனம் சேதம்

(கொழும்பு)

கொழும்பு கோட்டையில் நேற்று இடம் பெற்ற குண்டு வெடிப்புச் சம்பவத்தில் மூவர் காயமடைந்துள்ளதாக கோட்டை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நேற்று சனிக்கிழமை மாலை 5.15 மணியளவில் இடம்பெற்ற இக் குண்டு வெடிப்பில் ஏழு வாகனங்கள் சேதமடைந்துள்ளன.

கோட்டையில் உள்ள பள்ளிவாசல் ஒன்றிற்கு அருகிலேயே (14ஆம் பக்கம் பார்க்க)



நேற்றைய குண்டுவெடிப்பில் சேதமடைந்த வாகனங்கள்

### அன்பு மாணவர்களே!

க.பொ.த. உயர் தரத்தில் (2008) 3A எடுத்த மாணவர்களை வழமைபோல்

இலங்கை வங்கியும்

வலம்புரியும்

இணைந்து பாராட்டவுள்ளன என்ற செய்தியை மகிழ்வோடு தெரிவித்துக் கொள்கின்றோம்.

## ஆனையிறவை நோக்கி இராணுவம் முன் நகர்வு

(கொழும்பு)

கிளிநொச்சியைக் கைப்பற்றியதைத் தொடர்ந்து ஆனையிறவைக் கைப்பற்றும் நோக்கில் இராணுவத்தின் விசேட படையணி -1 முன்னேறி வருவதாக பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது.

நேற்றும் நேற்று முன்தினமும் எறிகணைத் தாக்குதல்கள் மற்றும் விமானத் தாக்குதல்களுடன் ஆனையிறவு மற்றும் முல்லைத்தீவின் வடகிழக்கு பகுதியை நோக்கி இராணுவத்தினர் நகர்வதாக சர்வதேச செய்திச் சேவையொன்று (14ஆம் பக்கம் பார்க்க)

## நாடாளுமன்றக் கலைப்பு சில நாட்களில் வெளிவரும்

### பொதுத் தேர்தலுக்கான திகதி குறித்து ஆராய்வு

(கிளிநொச்சி)

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்த கிளிநொச்சியைப் படையினர் கைப்பற்றியதையடுத்து எந்நேரமும் நாடாளுமன்றம் கலைக்கப்படலாமென கொழும்பு அரசியல் வட்டாரங்களில் பரபரப்பாகப் பேசப்படுகிறது.

கிளிநொச் (14ஆம் பக்கம் பார்க்க)

## தமிழரின் நியாயபூர்வ கோரிக்கை அரசும் புலிகளும் பேசவேண்டும்

### அமெரிக்கா வலியுறுத்தல்

(கொழும்பு)

தமிழர்களின் நியாயபூர்வமான கோரிக்கைகள் தொடர்பாக இலங்கை அரசாங்கமும் தமிழீழ விடுதலைப் புலிகளும் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்க வேண்டும் என அமெரிக்கா வலியுறுத்தியுள்ளது.

அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் பேச்சாளர் கோடன் டக்குயட் கிளிநொச்சியை படையினர் கைப்பற்றியதாக வெளியான செய்தி (14ஆம் பக்கம் பார்க்க)

## கிளிநொச்சியை படையினர் கைப்பற்றியது கவலை அளிக்கிறது–இந்திய கம்யூனிஸ்ட்

### கண்டித்து 6ஆம் திகதி ஆர்ப்பாட்டம்

(சென்னை)

கிளிநொச்சி நகரத்தை இலங்கை இராணுவம் கைப்பற்றியுள்ளது கவலையளிக்கிறது என்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு பிரிவு தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு பிரிவு செயலாளர் தா.பாண்டியன் வெளியிட்டுள்ள அறிக்கையில், இலங்கையில் பல ஆண்டுகளாக தீர்க்க முடியாமல் நீடித்துவரும் இனச்சிக்கல், இனப்போராக நடந்து வந்ததில் கிளிநொச்சி நகரத்தை இலங்கை இராணுவம் கைப்பற்றிவிட்டதாக வந்துள்ள செய்தியை, கவலை தரத்தக்க செய்தியாகவே இந்திய (02ஆம் பக்கம் பார்க்க)

## உயர்தரப் பரீட்சை பெறுபேறு வெளியாகியது

(யாழ்ப்பாணம்)

2008 க.பொ.த (உயர்தரப்) பரீட்சைப் பெறுபேறுகள் நேற்று இணையத்தளத்தில் வெளியாகின.

நேற்றைய தினம் கொழும்பில் உள்ள பாடசாலைகளின் பெறுபேறுகள் பரீட்சைத் திணைக்களத்தில் வைத்துக் கையளிக்கப்பட்டன. யாழ் மாவட்டத்திற்கான பெறுபேறுகள் நாளை (14ஆம் பக்கம் பார்க்க)

### 'கிளிநொச்சி' கைப்பற்றிய பின் அரசியலில் எழுந்த கருத்துக்கள்

# ஐ.தே.கட்சி தயாரித்த கேக்கை அரசு இப்போது வெட்டுகிறது


ணில் | விஜிதஹேரத் | ரவூப் ஹக்கீம் | கருணா

கிளிநொச்சியை இராணுவத்தினர் கைப்பற்றியுள்ளமையை வரவேற்றிருக்கும் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி, பயங்கரவாதத்திற்கு எதிராகப் போராடும் பாதுகாப்புத் தரப்பினருக்கு எப்பொழுதும் ஆதரவு தெரிவிப்பதாகக் கூறியுள்ளது.

2002ஆம் ஆண்டு போர்நிறுத்த உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்ட பின்னர் விடுதலைப் புலிகள் அமைப்பிற்குள் ஐக்கிய தேசியக் கட்சி பல பிளவுகளை ஏற்படுத்தி யிருப்பதாக அக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் பாலித ரங்க பண்டார சுட்டிக் காட்டினார்.

கருணா அம்மானையும் அவருடன் இணைந்த 6ஆயிரம் பேரையும் விடுதலைப் புலிகள் அமைப்பிலிருந்து பிரித்தோம். அதுவே விடுதலைப் புலிகளின் வீழ்ச்சிக்கு ஆரம்பமாக அமைந்தது. ரணில் விக்கிரமசிங்கவின் ஆட்சிக்காலத்தில் தயாரிக்கப்பட்ட கேக்கை தற்போதைய அரசாங்கம் வெட்டி புசிக்கிறது. எமது கொள்கை தொடர்ந்து கடைப்பிடிக்கப்பட்டிருந்தால் இரத்தம் எதுவும் சிந்தாமல் புலிகளை முற்றாகத் தோற்கடித்திருக்க முடியும் என அவர் கூறினார்.

**விடுதலைப் புலிகள் இராணுவ ரீதியாகவே தோற்கடிக்கப்பட வேண்டும்.**

தமிழீழ விடுதலைப் புலிகள் இராணுவ ரீதியாகவே தோற்கடிக்கப்பட வேண்டுமென்ற நிலைப்பாட்டிலேயே தமது கட்சி தொடர்ந்தும் இருப்பதாக ஜே.வி.பி. தெரிவித்துள்ளது.

தாம் தொடர்ச்சியாகக் கூறிவந்தது தற்பொழுது உண்மையாகியிருப்பதாக ஜே.வி.பியின் பிரசார செயலாளர் விஜித ஹேரத் கூறியுள்ளார்

விடுதலைப்புலிகள் சந்தித்திருக்கும் இந்தத் தோல்வியானது அவர்களை உளரீதி யாகவும் பாதிப்படையச் செய்திருக்கும் எனக் குறிப்பிட்டிருக்கும் அவர், போர்நிறுத்தம் ஒன்றுக்குச் செல்லாமல் அரசாங்கப் படைகள் விடுதலைப் புலிகளை முற்றாக ஒழிக்கவேண்டும் எனத் தெரிவித்தார்.

**அரசாங்கம் இன்னமும் அர்ப்பணிக்கவில்லை**

படைகளும் நாட்டு மக்களும் நாட்டுக்காகப் பல தியாகங்களை செய்துள்ள போதும் அரசாங்கம் இதுவரை எந்தத் தியாகத்தையும் செய்யவில்லை என சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் உப செயலாளர் நிசாம் காரியப்பர் தெரிவித்துள்ளார்.

சாதாரண மக்கள் பொருளாதார நெருக்கடி மற்றும் மோதல்களால் பல்வேறு சிக்கல்களுக்கு முகம் கொடுத்துள்ளனர். ஆனால் அரசாங்கம் இது வரை எந்தத் தியாகத்தையும் செய்யவில்லை எனக் குறிப்பிட்ட அவர் இராணுவ நடவடிக்கைகளால் வன்னியிலுள்ள மக்கள் மோசமாகப் பாதிக்கப்பட்டிருப்பதாகத் தெரிவித்தார்.

**விடுதலைப் புலிகள் அரசியல் ரீதியாக ஒழிக்கப்பட்டுவிட்டனர்.**

இது இவ்விதம் இருக்க, விடுதலைப் புலிகள் அரசியல் ரீதியாக ஒழிக்கப்பட்டு விட்டனர் என தமிழ் மக்கள் விடுதலைப் புலிகளின் தலைவர் கருணா அம்மான் (விநாயகமூர்த்தி முரளிதரன்) தெரிவித்தார்.

இந்த நிலையில் விடுதலைப்புலிகளுக்கு நிதியுதவியை வழங்குவது தொடர்பாக புலம்பெயர்ந்து வாழும் தமிழர்கள் ஒன்றுக்கு இரண்டு தடவை சிந்திக்க வேண்டும் எனக் கோரிக்கை விடுத்துள்ளார். (ந-5)

# கிளிநொச்சியை படையினர்...

கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ் மாநில செயற்குழு கருதுகிறது.

சில நாடுகளின் இராணுவ உதவிகளுடன் போராடிய இலங்கை இராணுவம் விடுதலைப் புலிகளை தோற்கடிக்கப்போவதாக கூறியபோதிலும், அரசு நடத்திய கண்மூடித்தனமான வான், தரைப்படைத் தாக்குதல்களால் நிராயுதபாணிகளான தமிழ்பேசும் மக்கள் கொல்லப்பட்டார்கள். சில இலட்சம்பேர் அகதிகளாக்கப்பட்டார்கள்.

அரசின் மனிதாபிமானற்ற மூர்க்கத்தனத்தையே இது காட்டுகிறது. 2009 ஆம் ஆண்டு புத்தாண்டு விழா பிரார்த்தனையிலும் விழாவி லும் ஈடுபட்டிருந்த மக்கள் மீதும் குண்டு வீசப்பட்டிருப்பது கடும் கண்டனத்துக்குரியதாகும்.

போர்க் கொடூரத்தையும் இலங்கைத் தமிழ் மக்கள் அநியாயமாகக் கொல்லப்படுவதைக் கண்டும், கேட்டும் கலங்கிப்போன இந்தியத் தமிழர்கள் அரசுடன் பேசி போர் நிறுத்தம் கண்டு தமிழ் மக்களின் உயிரைக் காப்பாற்ற எழுச்சி கொண்டு குரல் கொடுத்தனர்.

முதல்வர் தலைமையில் நடந்த அனைத்துக் கட்சிக் கூட்டத்தின் மூலமும், சட்டமன்றத்தில் ஒருமனதாக நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் மூலமும் அனைத்துக் கட்சிப் பிரதிநிதிகள் டில்லியில் பிரதமரைச் சந்தித்து முறையிட்ட பின்னரும் தமிழ் மக்களின் உணர்வையும் வேதனையையும் புரிந்துகொண்டு அதற்கேற்ப மத்திய அரசு நடவடிக்கை எடுக்கவில்லை என்பது வேதனையைத்தருகிறது.

இலங்கையில் நடக்கும் தமிழினப் பேரழிவுக்கு தீர்வு காணவேண்டுமென்பதில் இந்திய அரசுக்கு எவ்வித கவலையும் இல்லை. தமிழ் மக்களின் குரலை அலட்சியப்படுத்தி விட்டது. இருப்பினும் கிளிநொச்சியைப் பிடித்ததால் இராணுவ வெற்றி எனக் கூறும் இலங்கை அரசை, இன்றுடன், இத்துடன் போரை நிறுத்துமாறு இந்திய அரசு பகிரங்கமாக வற்புறுத்த வேண்டும்.

இலங்கை அரசு உடனடியாக போர் நிறுத்தத்தை அறிவித்து, இலங்கை வாழ் தமிழ் மக்களின் மனித, ஜனநாயக, அரசியல் உரிமை களை வழங்கி நடைமுறைப்படுத்தக் கூடிய திட்டத்தை அறிவிக்க வேண்டுகின்றோம்.

தமிழக மக்களின் உணர்வுகளையும், வேதனையையும் உணர்ந்து நடவடிக்கை எடுக்கத் தவறிய மத்திய அரசை கண்டித்து ஜனவரி 6ஆம் திகதி சென்னையில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி ஆர்ப்பாட்டம் நடத்தும்.

மத்திய அரசைக் கண்டித்து நடத்தும் இயக்கங்களுக்கு ஆதரவு தருவது என்றும் மாநில செயற்குழு முடிபு செய்கிறது என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந-5)

# க.பொ.த.(உயர் தர) பரீட்சை முன்னணிப் பெறுபேறுகள் சில...

(யாழ்ப்பாணம்)

க.பொ.த(உயர்தர) பரீட்சை (2008) பெறுபேறுகள் நேற்று வெளியாகின. பாடசாலை அதிபர்களினால் உறுதிப்படுத்தப்பட்டு அனுப்பப்பட்ட முன்னணிப் பெறுபேறுகள் வருமாறு:

**யாழ்/வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை**

**கலை (Arts)**

**3A** குயிந்தினி ஞானசேகரம், சிவை கஜேந்திரன், யாழினி சிவராஜா, பிரியதர்ஷினி காந்தி, சாளினி ஜெயபாலச்சந்திரன், துஷித்தா கமலநாதன், கமலாஜினி கேதாரநாதன், பிரியதர்ஷினி கஜேந்திரன்,

**2A B** கார்த்திகா சாந்தலிங்கம், கபிலா சௌந்தரராஜா, மாணிகா கணேசமூர்த்தி, நவவித்தியா பாலராமன், புவனா தெய்வேந்திரம், சுவேதா விஜயகுமார், தர்ஷிகா முருகதாஸ், திவ்வியவர்த்தனி கைலாயநாதன், டிலக்சா சண்முகராஜா, சர்மிளா பத்மநாதன், தவரூபிகா சிவகுமாரன், கேமாலினி புவனேஸ்வரன், மதிவதனி விநாயகமூர்த்தி, தயாநிதி கோவிந்தி.

**2A C** சகிதா தர்மராஜா, சிரசிற்றாதிலானி மாட்டின் நெல்ஷன், தபளிவினி மகேந்திரன், தனுசியா ஸ்ரீஸ்கந்தராஜா, துளசிவந்தனா மகேந்திரன், யசோதா இராசையா.

**2A S** அஸ்வினி பாளிகரன், மிதுர்சியா விமலரட்ணம்,

**A 2B** கிருஷிகா சிவசோதி, பவித்திரா திருநாவுக்கரசு, சாளினி ஆனந்தராஜா, சிரோமி சத்தியசீலன், தர்சிகா புஸ்பராஜா, யசோதா பூபாலசிங்கம், ஜீவிதா ரட்ணசபாபதி, கார்த்திகா வாமதேவன், சாதனா கந்தசாமி, சுரேக்கா தியாகராஜா, அபிராமி மகேந்திரன், லக்ஷனா தங்கராஜா.

**வர்த்தகம் (Com.)**

**3A** அர்ச்சுதா திருஞானசம்பந்தர், பானதி கந்தசாமி, மேனுகா இராஜேந்திரம்.

**2A B** நிரோஜினி பாலகிருஷ்ண சர்மா, ராஜி குலோத்துங்கன், மலர்மதி ஜெயரட்ணம்.

**A 2B** டேசிக்கா தங்கராஜா, பவித்திரா கோபால்கிருஷ்ணன்.

**ABC** சுதர்சனா சபாரெட்ணம், சுபன்யா சச்சிதானந்தம்.

**உயிரியல் (Bio.)**

**2A B** காருண்யா விஜயரட்ணம், நிரோஜி கந்தசாமி, கஜனி நித்தியானந்தராஜா, ஜனனி பஞ்சாட்சரம்.

**A 2B** ரம்யா சிவராஜசுந்தரம், சிவகஜனி ஸ்ரீகுமார், வினோதா யோகசுந்தரம், ஷர்மிகா அருணந்திசிவம், சுவர்ணா சச்சிதானந்தம்,டிலானி சிவஞானசுந்தரம், கிருஷ்ணபிரியா கோபாலகிருஷ்ணன், மாதுரி ஸ்ரீபாலன், கிருத்திகா கோபாலசுந்தரம், நிருசிகா சோதிநாதன்.

**ABC** சிந்துரேகா லோகேஸ்வரன், சுகன்யா மகேந்திரன், பிருந்தா இராஜரெட்ணம்.

**3B** அபர்ணா ஜெகநாதன், பவித்திரா கமலநாதன், தர்சினி உருத்திரகோடீஸ்வரன், சுனித்தா சிவராஜா, லிங்காசினி சண்முகலிங்கன், ஸ்ரீபிரியா செல்வராஜா.

**கணிதம் (Maths)**

தேவகி சிவஞானம் 2AB, தர்சினி குணேந்திரதாசன் A2B, கஜித்தா வசிகரன்ABC, தர்மிகா திசநாயகம்பிள்ளை 3B.

**யாழ்/சண்டிலிப்பாய் இந்துக்கல்லூரி**

**3A** செல்வன். ரி.சுதர்சன், செல்வன். ஆர்.ரஜீ பரன், செல்வி. ஜி.மேரியூப்ரேசியா.

**2AB** செல்வன். எஸ்.சரூபன், செல்வி. ஏ.டில்லிபபீனா.

**2AC** செல்வி. எம்.மேகலா.

**A2B** செல்வி. எல்.கம்சலா,செல்வி.ஈ.சுவீற்றி, செல்வி. ரி.கிருசாளினி, செல்வி. எஸ்.டனுஜா, செல்வன். எஸ்.ஜெயதீபன்.

**ABC** செல்வி.எஸ்.அனுசா, செல்வி. எம்.சிந்துஜா, செல்வி. கே.சரண்யா, செல்வி. என்.வாசுகி.

செல்வி. வி.ஜிந்துஜா(ABS),செல்வி. எஸ்.மகிஜா(ABC), செல்வி .மே.மின்சலா(A2C), செல்வி.ரி.வித்தியா(3B), செல்வன். ரி.சுரேஸ் (2BC), செல்வி. வி.சுரேகா(2BC).

# யாழ்.சிறைச்சாலை காவலர் பதவி

(யாழ்ப்பாணம்)

யாழ்.சிறைச்சாலையில் நிலவும் காவலர்களுக்கான ஆளணிப் பற்றாக்குறையை நீக்குவதற்கு சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சரும் வட மாகாணத்திற்கான விசேட செயலணியின் தலைவருமான டக்ளஸ் தேவானந்தா உரிய நடவடிக்கைகளை எடுக்கவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

நேற்று மாலை யாழ்.அலுவலகத்தில் சிறைச்சாலை காவலர் பதவிக்காக விண்ணப்பித்து நேர்முகப் பரீட்சையில் கலந்து கொண்டவர்கள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவைச் சந்தித்து கலந்துரையாடினர்.

இதன்போது கருத்துத் தெரிவித்த அமைச்சர், யாழ்.சிறைச்சாலையில் நிலவும் காவலர்களுக்கான ஆளணிப் பற்றாக்குறையை நீக்குவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும், இவர்களுக்கான போட்டிப் பரீட்சைகள் இம்மாத இறுதிக்குள் அல்லது அடுத்த மாத முதற் பகுதியில் இடம்பெறவுள்ளதாகவும் தெரிவித்தார். (ந)

சோதிடஞானி
ஆ. சண்முகலிங்கம்
(சண்மாஸ்ரர்) எழுதிய
வியாழ மாற்றம்
(06-12-2008 - 2009
டிசம்பர் வரை)
வெளிவந்துள்ளது
இ வாசிக்கத் தவறாதீர்கள்

VACANCY
Post :- Trainee Software Developer (Male)
Age :- 18 - 26, No of Vacancies : 03
Knowledge :- VB/VB.Net
சுயவிபரக் கோவையினை கீழுள்ள முகவரிக்கு 07.01.2009 க்கு முன் அனுப்பி வைக்கவும்.
MSDC
யாழ். வீதி,
மானிப்பாய்.
T.P. :- 077-9560477
(2063)

## தாச்சிச் சுற்றுப் போட்டி

(யாழ்ப்பாணம்)

சோ.ஆ. நிறுவனத்தின் அனுசரணையுடன் யாழ். மாவட்ட தாச்சி விளையாட்டுச் சங்கம் நடத்தும் வலிகாமம், தென்மராட்சி, வடமராட்சி, தீவகம் ஆகிய பிரிவில் உள்ள கழகங்களுக்கு இடையிலான மாபெரும் தாச்சி சுற்றுப் போட்டி இன்று ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு யாழ். இந்துக் கல்லூரி மைதானத்தில் யாழ். மாவட்ட தாச்சி விளையாட்டு சங்கத் தலைவர் செ. சண்முகலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இப்போட்டியில் மானிப்பாய் வெஸ்ரோம் விளையாட்டு கழகத்தினை எதிர்த்து மயிலிட்டி ஒற்றுமை விளையாட்டு கழகம் மோதவுள்ளது. (ஓ-4)

## கட்டாக்காலி கால் நடைகளால் பயிர்கள் சேதமடைகின்றன

(சாவகச்சேரி)

தென்மராட்சியின் சில பகுதிகளில் ஆடு, மாடு, பன்றி போன்ற பிராணிகளால் நெற்பயிர்க்கும், மேட்டு நிலப் பயிர்களும் அழிவடைவதாக விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

புற்தரைகளில் மேய்வதற்காக அவிழ்த்து விடப்படும் ஆடு, மாடுகள் விவசாய நிலங்களில் பயிர் அழிவுகளை மேற்கொள்கின்றன. இதேவேளை கால்நடைகள் வளர்ப்போரினால் கட்டாக் காலிகளாக விட்டு பயிரழிவு ஏற்பட்டால் அவை பிடிக்கப்பட்டு விவசாயத் திணைக்கள சட்டங்களின் படி நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று அப்பகுதி விவசாய மக்கள் சம்மேளனங்கள் அறிவித்துள்ளன. (ஓ-29)



யூனியன் அஷ்யூரன்ஸ் நிறுவனத்தினால் விபத்தில் மரணமடைந்த காரைநகர் கருங்காலியைச் சேர்ந்த சண்முகநாதனின் இழப்பீட்டுக் கொடுப்பனவு வழங்கும் வைபவம் அண்மையில் காரைநகர் சுந்தரமூர்த்தி நாயனார் வித்தியாலயத்தில் நடைபெற்றது. இதன்போது மரணமடைந்தவரின் மகனிற்கு வித்தியாசாலை அதிபர் சு.கணேசமூர்த்தி இழப்பீட்டுக் காசோலை கையளிப்பதனையும் அருகில் யூனியன் அஷ்யூரன் அபிவிருத்தி முகாமையாளர் கோ. ஸ்ரீவரதன், காப்புறுதி ஆலோசகர் த. குவேந்திரன், மற்றும் உத்தியோகத்தர்களையும் படங்களில் காணலாம். படம்:காரையூர் செய்தியாளர்.

## குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | யாழ்ப்பாணம் | மருதனார்மடம் | சுன்னாகம் | திருநெல்வேலி |
|---|---|---|---|---|
| 1Kg | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 500 | 500 | 450 | 400 |
| உருளைக்கிழங்கு | 200 | 260 | 250 | 220 |
| பச்சைமிளகாய் | 800 | 700 | 600 | 600 |
| தக்காளி | 700 | 450 | 600 | 600 |
| அவரை | -- | 200 | -- | -- |
| மரவெள்ளிகிழங்கு | 70 | 70 | 80 | 70 |
| கோவா | 110 | 180 | 160 | 120 |
| கரட் | 200 | 120 | 120 | 160 |
| பூசணி | 110 | 100 | 100 | 80 |
| புடோல் | 150 | 140 | 110 | 160 |
| வாழைக்காய் | -- | 120 | 120 | 100 |
| சின்ன வெங்காயம் | 140 | 120 | 100 | 110 |
| பெரிய வெங்காயம் | -- | 300 | -- | -- |
| பாகற்காய் | 300 | 350 | 300 | 300 |
| வெண்டிக்காய் | 150 | 120 | 120 | 120 |
| கரணைக் கிழங்கு | 600 | 50 | 40 | 40 |
| பயிற்றங்காய் | 250 | 200 | 300 | 280 |
| லீக்ஸ் | 240 | 220 | 300 | 250 |
| போஞ்சி | 400 | -- | -- | 520 |
| தேசிக்காய் | 100 | 80 | 100 | 80 |
| தேங்காய் - 01 | -- | 40 | 45 | 40 |
| கீரை - 1 பிடி | -- | 40 | 40 | 50 |

(ஓ-9-10)

## தேசிய வாசிப்பு மாத இறுதி நாள் நிகழ்வு

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நகரசபை பொது நூலகத்தினரால் நடாத்தப்படும் தேசிய வாசிப்பு மாத இறுதிநாள் நிகழ்வு நாளை மறுநாள் செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணிக்கு சாவகச்சேரி நகரசபை மாநாட்டு மண்டபத்தில் சாவகச்சேரி நகரசபை செயலாளர் திருமதி. குணமணிதேவி – ஆறுமுகம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திருமதி. மதுமதி - வசந்தகுமார் கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

தொடர்ந்து சிறப்புமலர் வெளியீடும், கலை நிகழ்வுகளும் இடம் பெறவுள்ளது. அத்துடன் மாணவர்களிடையே நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கான பரிசில்களும் வழங்கப்படவுள்ளது. (ஓ-29)

## கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட தொண்டர் ஆசிரியர்களுக்கான அவசர கலந்துரையாடல் ஆரியகுளம் சந்தியிலுள்ள புதியஉயர் கல்லூரியில் நாளை திங்கட்கிழமை காலை 8.00 மணிக்கு நடைபெறவுள்ளதால் அனைவரையும் தவறாது சமூகம் தரும்படி தொண்டர் ஆசிரியர் சங்கத் தலைவர் கேட்டுள்ளார். (ஓ-6)

## ‘திருவாசகம்’ முற்றோதல்

(யாழ்ப்பாணம்)

வடலியடைப்பு - புதறானை ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயத்தில் திருவாசகம் முற்றோதல் பெருவிழா நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை காலை 8 மணிக்கு இடம் பெறவுள்ளது.

இதில் விநாயகருக்கும் மாணிக்கவாசக சுவாமிகளுக்கும் விசேட தீபாராதனை இடம் பெற்று அதனைத் தொடர்ந்து திருவாசகம் முற்றோதல் நிகழ்வு ஆரம்பமாகவுள்ளது. (ஓ-4)

*****

(சாவகச்சேரி)

தென்மராட்சி திவ்விய ஜீவன சங்கத்தினர் திருவெம்பாவையை முன்னிட்டு ஆலயங்களில் நடத்தி வரும் திருவாசக முற்றோதலில் இன்று ஞாயிற்றுக்கிழமை நுணாவில் மேற்கு வீரபத்திரர் ஆலயத்தில் நடத்தவுள்ளதாக சங்கத்தினர் தெரிவித்தனர். (ஓ-29)

## வாரம் ஒரு தகவல்

### நாம் நன்றாக இருக்க வேண்டும்!

அமெரிக்காவில் ஒரு நிறுவனம் மனிதர்களுடைய அதி தீவிர விருப்பங்கள் என்ன என்பதை தெரிந்து கொள்வதற்காக ஆய்வு ஒன்றை நடத்தியது.

நாட்டிலுள்ள பெரிய செல்வந்தர்கள், அறிஞர்கள், நிர்வாகிகள், தொழிலதிபர்கள், சாதாரண மக்கள், இப்படிப் பல தரப்பட்ட மக்களைச் சந்தித்து, அவர்களிடம் அச்சடித்த வினாத்தாள்களை கொடுத்து, உங்களுக்கு வாழ்க்கையில் முக்கியமான முதல் தேவை எதுவென்று நினைக்கிறீர்கள்? இரண்டாவது தேவையாக நீங்கள் எதை நினைக்கிறீர்கள்? என்று வரிசைப்படுத்தி எழுதிக் கொடுக்கும் படி கேட்டுக் கொண்டது.

எல்லோரும் எழுதிக் கொடுத்தார்கள். அதையெல்லாம் தொகுத்துப் பார்க்கும் போது அநேகமாக எல்லோரும் எழுதிக் கொடுத்த பதில் என்ன தெரியுமா?

முதலாவது தலையாயத் தேவை தமது ‘உடல் நலம்’ என்றும் இரண்டாவது தேவை ‘சுமுகமான உறவு’ என்றும் குறிப்பிட்டிருந்தார்கள்.

அதாவது உடம்பும் மனமும் நன்றாக இருக்க வேண்டும் என்பது தான் மனிதனுடைய எதிர்பார்ப்பாகும்.

தென்கச்சி கோ.சுவாமிநாதன்

## இராசி பலன்

04-01-2009
(மார்கழி 20, ஞாயிற்றுக்கிழமை)
உத்தரட்டாதி காலை 6.54 மணிவரை
அட்டமி பின்னிரவு 12.15 மணிவரை
இராகுகாலம் 5.01- 6.31 மணிவரை
சுபநேரம் 9.31-11.01 மணிவரை

| | |
|---|---|
| மேடம் | உறவினர் மனஸ்தாபம், சுபசெலவு, சயன சுகக் குவைு, காரிய அலைச்சல். |
| இடபம் | கீர்த்தி, எடுத்த காரியம் கைகூடும், குடும்ப மகிழ்ச்சி, போசன சுகம். |
| மிதுனம் | கடின முயற்சி, அதிகாரம், தூர தேசச் செய்தி, போசன சுகம். |
| கடகம் | புதிய திட்டம், சரீரப் பிரயாசை, பிரயாணம், பிதா சிந்தை. |
| சிங்கம் | நண்பர்கள் சந்திப்பு, அப கீர்த்தி, முயற்சி தாமதம், போசன நன்மை. |
| கன்னி | காரியசித்தி, விருந்துபசாரம், சென்ற இடத்தில் செல்வாக்கு, பொருள் சேர்க்கை. |
| துலாம் | புதிய விடயம், உடல் நலம், காரிய நன்மை, பொருள் வருவாய். |
| விருச்சிகம் | பண விரயம், முயற்சி தாமதம், புத்திரரால் கவலை, ஆரோக்கியக் குறைவு. |
| தனுசு | புதிய முயற்சி, திடீர் நன்மை, மனச்சோர்வு, தாய்வழி உறவு. |
| மகரம் | எடுத்த காரியம் கைகூடும், பெருமையடைதல், பொருள் சேர்க்கை, அன்னியர் சந்திப்பு. |
| கும்பம் | முயற்சி தாமதம், கடின வார்த்தை, போசன சுகக் குறைவு, பண விரயம். |
| மீனம் | நல்ல முயற்சி, தேக நலன், கற்பனை மிகுதி, நண்பர்கள் சந்திப்பு. |

வளவன்

## வாழ்வோம்

காயங்களின் வலிகளில்..
காத்திருக்கிறது எம் ... மனங்கள் ...
விடிந்தவையும் விரவிப்போன
வாழ்வில்...
நலிந்த மரணத்தின்
ரணங்களில் காயப்பட்டிருக்கிறது
எம் பொழுதுகள்...

கசிந்த விழிநீரை
துடைக்கும் புறங்கையின்
இருப்புக்களில் - எம்
வேதனையின் வெளிப்பாடான
மூச்சின் மாறுதல்கள் ...

கத்திப் பார்த்தோம்
சத்தம் வந்தது - ஆனால்
சாதிக்க முடியவில்லை
சாய்ந்தது உயிர்கள்
சராசரி வாழ்வில் சறுக்கிப் போனோம்

சாவும் சாமானிய வாழ்வில்
சாதிக்காத எம் பயணமும்
இன்னும் மாறவில்லை ...
மரணிக்கப் பிறந்ததற்காய்
விடியலின் ஜனனிப்புக்களை
மறந்து போகமாட்டோம்...
வாழ்வோம் வாழ்வின்
அந்தம் வரை ...

K. சசி.
இணுவில்

# யாழ்.குடாநாட்டில் கிராம மட்டங்களில் அபிவிருத்திப் பணிகளை முன்னெடுக்க திட்டம்

## அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டில் அனைத்து அபிவிருத்திப் பணிகளும் கட்டம் கட்டமாக கிராம மட்டங்களில் இருந்து பிரதேச செயலர் பிரிவுகள் வாரியாக முன்னெடுக்கப்படும் என சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சரும் வடமாகாணத்திற்கான விசேட செயலணியின் தலைவருமான டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

இதன்பிரகாரம் ஏற்கனவே யுத்தம் காரணமாக ஏற்பட்டுள்ள பாதிப்புக்களுடன் அண்மைக்கால வெள்ள அனர்த்தம் காரணமாக ஏற்பட்டுள்ள பாதிப்புக்களையும் உள்ளடக்கி மேற்படி அபிவிருத்தித் திட்டங்கள் ஆரம்பிக்கப்படும் எனத் தெரிவித்துள்ள அமைச்சர் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கான ஏனைய உதவித் திட்டங்கள் யாவும் விரைவில் ஆரம்பிக்கப் படும் எனவும் தெரிவித்துள்ளார்.

யாழ்.மாவட்டத்தில் பாதிக்கப்பட்டுள்ள விவசாயத்துறையை துரிதகதியில் மீளக்கட்டியெழுப்பி அபிவிருத்தி செய்வது தொடர்பில் உரிய அவதானங்கள் செலுத்தப்பட்டு வருவதை சுட்டிக்காட்டிய அமைச்சர் இன்னும் சில மாதங்களில் விவசாய உற்பத்திகளில் பாரிய முன்னேற்றங்களை காண இயலும் என்று நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

யாழ்.குடாநாட்டில் சுகாதாரப் பணிகளை மேலும் தரமுயர்த்தி அதனைப்பரவலாக மேற்கொள்ள வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தியுள்ள அமைச்சர் தற்போது நுளம்புகள் அதிகரித்துள்ள நிலையில் நுளம்புகளைக் கட்டுப் படுத்துவதற்கான நிலையான வேலைத் திட்டம் ஒன்றை விரைவில் நடைமுறைப் படுத்த உள்ளதாகவும் இவ்விடயம் தொடர்பில் சுகாதாரத் துறை சார்ந்த அதிகாரிகளுடன் கலந்துரை யாட இருப்பதாகவும் மேலும் தெரிவித்துள்ளார். (ஓ-6)



யாழ்.மாவட்ட மாதர் அபிவிருத்திச் சங்கங்களுக்கு சுழற்சி முறை கடனுதவி நிதியை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கையளிப்பதைப் படத்தில் காணலாம்.

# வீட்டுப் பாவனை உபகரணங்களால் வைரஸ் தொற்றும் அபாயம்

## அமெரிக்க ஆராய்ச்சியாளர்கள் எச்சரிக்கை

தொலைக்காட்சியை தூர இருந்து இயக்கும் கருவிகள் (ரிமோட் கொன்ரோல்ஸ்), குளியலறை தண்ணீர் குழாய் பிடிகள், குளிர் சாதனப்பெட்டிகளின் கதவுகள் என்பன வைரஸ் கிருமிகளின் உறைவிடமாக விளங்கு வதாக அமெரிக்க ஆராய்ச்சியாளர்கள் எச்ச ரித்துள்ளனர்.

தும்மல், தடிமன் மற்றும் தொற்றுநோய்கள் என்பன பரவுவதற்கு வழிவகுக்கும் வைரஸுகள் பரவ, மேற்படி நாளாந்தப் பாவனை உபகரணங்களில் பெரும் பங்களிப்பு செய்வதாக அமெரிக்க வேர்ஜினியா மாநில ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.

30 வீடுகளிலுள்ள வீட்டு உபகரணங்களை ஆய்வுக்குட்படுத்திய பின்னரே இந்த உண்மை கண்டறியப்பட்டதாக மேற்படி ஆராய்ச்சிக்கு தலைமை தாங்கிய மருத்துவ கலாநிதி பிர்கிட் வின்தர் தெரிவித்தார்.

இந்த வீட்டு உபகரணங்களை பாவித்து 48 மணித்தியாலங்களின் பின் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையில் ஆய்வுக்குட்படுத்தப்பட்டவர்களில் அரைப்பங்கினரின் விரல் நக இடுக்குகளில் மேற்படி வைரஸுகள் இருப்பதை அவதானித்ததாக அவர் கூறினார். (ஓ-6)

# வவுனியாவிலுள்ள வன்னி மக்களை மீளக்குடியமர்த்த நடவடிக்கை

## வவுனியா அரசாங்க அதிபர் தெரிவிப்பு

(வவுனியா)

வன்னியிலிருந்து வெளியேறி வவுனியாவில் தங்கவைக்கப்பட்டிருப்பவர்களை மீளக் குடியமர்த்துவதற்கான தற்காலிக கொட்டகைகளை அமைக்கும் பணிகள் முன்னெடுக்கப்பட்டிருப்பதாக வவுனியா மாவட்ட அரசாங்க அதிபர் தெரிவித்துள்ளார்.

வன்னியிலிருந்து இடம்பெயர்ந்து 659 பேர் இதுவரை வவுனியாவுக்கு வருகை தந்திருப்பதாகத் தெரிவித்திருக்கும் வவுனியா மாவட்ட அரசாங்க அதிபர் சாள்ஸ் இவர்கள் நெலுக்குளம் இடைத்தங்கல் முகாமிலும், செட்டிக்குளம் மெனிக்பாமிலும் தங்கவைக்கப்பட்டிருப்பதாகக் கூறினார்.

செட்டிக்குளம் மெனிக்பாமில் தங்கவைக்கப்பட்டிருப் பவர்களில் முதல் கட்டமாக 100 குடும்பங்களை இம்மாதம் 5 ஆம் திகதி மீளக்குடியமர்த்தவுள்ளோம். இதற்காக தற்காலிகமாக 30 கொட்டகைகள் அமைக்கப்பட்டு வருகின்றன. இவற்றில் பெரும்பாலான வேலைகள் பூர்த்தியடைந்துள்ளன என்றார்.

30 தற்காலிக கொட்டகைகளில் 1·5 கொட்டகைகளின் பணிகள் முழுமையாக பூர்த்தியடைந்திருப்பதாகவும் எஞ்சியவற்றின் பணிகள் மும்முரமாக மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அவர் குறிப்பிட்டார். (ஓ-6)

# வலிகாமம் பிரதேசத்தில் கிணறுகள் துப்புரவுப் பணி

(யாழ்ப்பாணம்)

ஐக்கிய அபிவிருத்தி நம்பிக்கை நிதியம் நிறுவனத்தால் மாவட்ட சுகாதார பணிமனை மற்றும் UN அமைப்புக்களின் வேண்டுகோளுக்கிணங்க வலிகாம பிரதேசத்திலுள்ள பாடசாலைகள், பொதுக்கிணறுகள் என்பன சுத்திகரிக்கப்பட்டன.

இச் செயற்திட்டத்தில் வலிகாம பிரதேசத்தில் நிஷா புயல் மற்றும் வெள்ள அனர்த்தத்தால் சேதமடைந்த தெரிவு செய்யப்பட்ட 18 பாடசாலைகளில் 21 கிணறுகளும், முன்னுரிமை அடிப்படையில் 30 பொதுக்கிணறுகளும், சுகாதார வைத்திய அதிகாரி ஊடாக தெரிவு செய்யப்பட்டு பிரதேச பொதுச்சுகாதார பரிசோதகர் ஊடாக பரிசீலனை செய்யப்பட்ட 26 கிணறுகளும் சுத்திகரிக்கப்பட்டன.

இதனால் அப்பிரதேச மக்கள் மிகவும் பயனடைந்துள்ளதாகவும், மேலும் மாசடைந்த 70 பொதுக்கிணறுகள் சுத்திகரிக்கப்பட உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (ஓ-2)

# ஈழத்துச் சிதம்பரத்தில் பஞ்சரத பவனி

(காரைநகர்)

காரைநகர் ஈழத்துச் சிதம்பரத்தில் திருவாதிரை உற்சவ பஞ்சரத பவனி 9ஆம் திகதி வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளது. அன்றைய தினம் காலை 7மணிக்கு வசந்த மண்டப பூசை நடைபெற்று நடராசப்பெருமான் அம்பிகையுடனும் பரிவார மூர்த்திகளுடனும் காலை 9 மணியளவில் தேரில் எழுந்தருளி பஞ்சரத பவனி நடைபெறும்.

அன்றைய தினம் பின்னிரவு 2மணிக்கு மூல மூர்த்திக்கு அபிஷேகமும் அதனைத் தொடர்ந்து 3மணிக்கு வசந்த மண்டபத்தில் ஆருத்திரா அபிஷேகமும் அதிகாலை 6 மணிக்கு நடேசர் ஆருத்திரா தரிசனமும் நடைபெறும்.

திருவாதிரை உற்சவத்தின் பஞ்சரத பவனி அன்று அதிகாலை 5 .30 மணி தொடக்கம் யாழ் நகரத்தில் இருந்து ஆரம்பிக்கும் அனைத்து பஸ் சேவைகளும் நேரடியாக ஈழத்துச் சிதம்பர ஆலயம் செல்லும் அதே வேளை காரைநகருக்குள் உள்ளூர் போக்குவரத்து சேவைகளும் நடைபெறவுள்ளது. (ஓ-246)

# வன்னியில் தஞ்சமடைந்த 52 பேர் மன்னாருக்கு மாற்றம்

(கொழும்பு)

வன்னிப் போர் முனை பிரதேசத்தில் இராணுவத்தினரிடம் சரணடைந்ததாகத் தெரிவிக்கப்படும் 52 பொதுமக்களை மன்னார் நகரப்பகுதிக்கு இராணுவத்தினர் அழைத்துச் சென்றதாக மன்னார் தகவல்கள் தெரிவித்துள்ளன.

உயிலங்குளம் பகுதியில் இராணுவத்தின் பொறுப்பில் இருந்த இவர்களுக்கான தங்குமிட வசதிகளை ஏற்படுத்துவது தொடர்பாக நேற்று முன்தினம் பிற்பகல் மன்னார் அரசாங்க அதிபர் நீக்கிலாஸ் பிள்ளை தலைமையில் அவசர கூட்டம் ஒன்று நடைபெற்றுள்ளது.

மன்னார் மாவட்டத்தில் செயலாற்றும் முக்கிய சர்வதேச மற்றும், உள்ளூர் தொண்டு நிறுவனப் பிரதிநிதிகள், புனர்வாழ்வுப் பிரிவின் முக்கிய அதிகாரிகள் மற்றும் செயலக உயரதிகாரிகள் இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

வன்னிப்பிரதேசத்தில் இருந்து ஏற்கனவே மன்னார் நகரப்பகுதிக்கு இடம் பெயர்ந்த பல குடும்பங்கள் இன்னும் மன்னார் கனி மோட்டை என்னுமிடத்தில் உள்ள இடைத்தங்கல் முகாமில் தங்க வைக்கப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஓ-6)

# சென்னையில் உள்ள இலங்கைத் தூதரகத்தின் பாதுகாப்புகள் அதிகரிக்கப்பட்டுள்ளன

(சென்னை)

கிளிநொச்சி பகுதியை இலங்கை இராணுவம் கைப்பற்றியதையடுத்து சென்னையில் உள்ள இலங்கை தூதரகத்துக்கு பாதுகாப்புகள் அதிகரிக்கப்பட்டுள்ளன.

இலங்கையில் இராணுவத்துக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையே கடும் சண்டை நடைபெற்று வருகிறது. இலங்கையில் கிளிநொச்சி பகுதியை விடுதலைப் புலிகளிடம் இருந்து இலங்கை இராணுவம் தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துள்ளதாக ஜனாதிபதி ராஜபக்ஷ அறிவித்துள்ளார்.

இதைத் தொடர்ந்துசென்னை ஆழ்வார் பேட்டையில் உள்ள இலங்கை துணை தூதரகத்துக்கு பொலிஸ் கமிஷனர் இராதா கிருஷ்ணனின்உத்தரவின் பேரில் பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டது.

இராமேஸ்வரம் கடல் பகுதியில் பாதுகாப்புப் பணிகள் அதிகரிக்கப்பட்டுள்ளன. (ஓ-6)

# கடந்த மூன்று மாதங்களில் 236 விமான தாக்குதல்கள்

(கொழும்பு)

கடந்த மூன்று மாத காலப் பகுதியில் வன்னிப் பிரதேசத்தில் தாக்குதல்கள் இடம்பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. தமிழீழ விடுத்லைப் புலிகளின் இலக்குகள் நோக்கி இந்தத் தாக்குதல்கள் மேற்கொள்ளப் பட்டதாக விமானப் படைப் பேச்சாளர் ஜானக நாணயக்கார தெரிவித்துள்ளார்.

மிக் 27 ரக விமானங்கள் எப் 7 விமானங்கள் மற்றும் எம்.ஐ.24 ரக விமானங்களைப் பயன்படுத்தி இந்தத் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை அநேக சந்தர்ப்பங்களில் பொதுமக்கள் செறிவாக வாழும் பிரதேசங்களுக்கு அரச படையினர் விமானத் தாக்குதல்களை மேற்கொள்வதாக தமிழீழ விடுதலைப் புலிகள் பகிரங்கமாக குற்றம் சாட்டி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஓ-6)

# இலங்கையருக்கான வேலைவாய்ப்பு கொரிய குடியரசினால் இடைநிறுத்தம்

(கொழும்பு)

இலங்கை பணியாளர்களை தமது நாட்டின் வேலைவாய்ப்புக்களுக்காக அழைப்பதை கொரிய குடியரசு இடை நிறுத்தியுள்ளது.

இலங்கை உட்பட 15 நாட்டுப்பணி யாளர்களுக்கு இந்த தடை விதிக்கப்பட்டுள்ளது.

பொருளாதார நெருக்கடியினால் வேதனம் வழங்க முடியாமை இதற்கான காரணம் என அந்த நாடு தெரிவித்துள்ளது.

எனினும் கொரியாவின் இந்த நடவடிக்கை கொரியாவில் எற்கனவே பணிகளில் ஈடுபட்டுள்ளோருக்கு பாதிப்பை ஏற்படுத்தாதென வெளிநாட்டு வேலை வாய்ப்புப்பணியகத்தின் தலைவர் கிங்ஸ்லி ரணவக்க தெரிவித்துள்ளார். (ஓ-6)

# இலங்கையில் தமிழர் 30

## ஆதி இரும்புக் காலம்

தாமிரபரணியின் கழிமுகத்தை அண்டிய வேறும் இடங்களில், குறிப்பாகக் காயல் பட்டினம் மற்றும் கொற்கை ஆகிய இடங்களில், முக்கியமான சவ அடக்கங்கள் உள்ளன. இப் பகுதியில் இருந்த முற்பட்ட கொற்கை இற்றைக்கு 2000 ஆண்டுகளுக்கு முன்பு சிறப்புமிகு துறையாகத் தூர வர்த்தகர்களுக்கு உதவியது.

### வைகைச் சமவெளி

வைகைச் சமவெளியிலும், இதேபோல் ஆதி இரும்புக் காலத் தொல்லியல் தலங்கள் பரவிக் காணப்படுகின்றன. தமிழ்நாட்டின் தென்பகுதியில் ஓடும் நதிகளுள் வைகை ஒரு முக்கியமான நதியாகும்.பழனிமலைப் பகுதியிலிருந்து பாயும் இந்நதி வளம்படுத்தும் சமவெளியில் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த நகர மையமாகிய மதுரை உன்னத நிலையில் காணப்படுகின்றது.

தமிழ்நாட்டில் மிக முற்பட்ட பண்பாட்டு முன்னேற்றங்கள் காணப்பட்ட ஓர் இடம் வைகைச் சமவெளியாகும். இச் சமவெளியின் மேற்குப் பகுதியில் வரலாற்றுக்கு முற்பட்ட காலத் தொல்லியல் தலங்கள் காணப்படுகின்றன.

இடைக்கற்கால மக்கள் இங்கு வாழ்ந்தனர் என்பதைக் காட்டும் வகையில் குறுங்கற் கருவிகள் பல இடங்களில் கிடைத்துள்ளன. இந்த இடைக்கற்காலத் தொல்லியல் தலங்களில் அடுத்து வரும் ஆதி இரும்புக் காலத்துச் சான்றுகள் காணப்படுவதால், ஆதி இரும்புக்காலப் பண்பாடு முன் அங்கிருந்து இடைக்கற்கால மக்கள் மத்தியில் பரவியது என்று ஊகிக்கலாம்.பழனிமலைப் பகுதியிலிருந்து மதுரை வரையுள்ள நிலப் பகுதியில் ஆங்காங்கே ஆதி இரும்புக் காலத்துச் சவ அடக்கங்களும் கல்வட்டங்களும் காணப்படுகின்றன.

மதுரைப் பகுதியில் ப்ல ஆதி இரும்புக் காலச் சவ அடக்கங்கள் நெருக்கமாகக் காணப்படுகின்றன. இவற்றின் உதவி கொண்டு, இப் பகுதித் தலங்களின் தொன்மையையும், ஒரு முக்கிய நகர மையம் அங்கு எழுவதற்கு வழிகோலிய முன்னேற்றங்களையும் அறிந்து கொள்ள முடிகின்றது.

பாண்டியர் தலை நகராகப் பின்னர் இந்த நகர மையம் மாறு வதற்கு உதவிய சூழ்நிலையைப் புரிந்து கொள்ள இச் சான்றுகள் பயனுள்ளவை.

### காவேரித் தாழ்நிலம்

ஆதி இரும்புக் காலப் பணப்பாடு இன்னொரு முக்கியமான வழியாகவும் தமிழ்நாட்டில் பரவியது. அது காவேரி நதி வழியாகும். தென் கர்நாடகத்திலிருந்து தமிழ்நாட்டுக்குள் பாயும் இந் நதி வழியே இலகுவில் ஆதி இரும்புக் காலப் பண்பாடு கர்நாடகத்திலிருந்து நேராகப் பரவ முடிந்தது.

காவேரி வளம்படுத்திய மேல் நிலப் பகுதிகளில் இருந்து கிழக்கு நோக்கிச் சேலம் மாவட்டம் வழியாகப் பரவியது போல், இப்பண்பாடு மேற்கிலிருந்து கொங்கு நாடு வழியாகவும், தென் மேற்கிலிருந்து பழனிமலைப் பகுதி வழியாகவும் பரவி இருக்கவேண்டும் என ஸெனெவிரத்ன கருதுகிறார். காவேரி நதிக் கடலுக்குள் சேருமுன் பாய்கின்ற நிலமாகிய திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் பெளருமளவு ஆதி இரும்புக் காலத் தொல்லியல் தலங்கள் காணப்படுகின்றன.

இத் தலங்களுள் இரண்டு (கரூர் மற்றும் ஆதிகாலத்து உறையூர் ) ஆதி வரலாற்றுக் காலத்தில் இரு முக்கிய அரச மரபுகளின் ஆட்சிப் பீடங்களாக அமைந்தன. கரூர் ஆதிச் சேர மன்னர்களின் ஆட்சி நிலையமாக அமைய, உறையூர் ஆதிச் சோழருடைய ஆட்சிப் பீடமாக எழுந்தது. இவற்றுக்குக் கிழக்கே மேலும் ஒரு பிரசித்தி பெற்ற நகர மையம் வரலாற்றுக் காலத்தில் புகழ்பெற்று விளங்கியது.

இதுசோழருடைய தலைநகராக விளங்கிய தஞ்சாவூர் ஆகும் .காவேரியின் கழிமுகப் பகுதியில்,அதாவது தமிழ்நாட்டின் கிழக்குக் கரையில் , பிரசித்தி பெற்ற ஆதி வரலாற்றுக் காலத்துறையாகிய புகார் எனப்பட்ட காவேரிப் பட்டினமும் காணப்பட்டது. ஆயிரம் ஆண்டுகளுக்கு மேலாக இத்துறை. சோழநாட்டின் கடல் வர்த்தகத்தில் முக்கிய பங்கு பெற்றிருந்தது. பாளி வராற்றேடுகளில் காவேரிப் பட்டின என்று பெயர் பெறும் இத்துறை தமிழ் நூல்களில் காவிரிப் பூம்பட்டினம் எனப் பொதுவாக அழைக்கப்படும்.


காவேரிப் பட்டினத்துக்குத் தெற்கே மேலும் ஒரு பிரசித்தி பெற்ற துறையாகிய நாகபட்டினம் காணப்பட்டது.இவ்விடத்திலும் ஆதி இரும்புக் காலத்துத் தொல்லியல் சான்றுகள் கிடைத்துள்ளன. இவை உள்ளூர்ப் பகுதிகளில் கிடைக்கும் சான்றுகளுக்கு பிற்பட்டவை எனலாம்.

தஞ்சாவூருக்குத் தெற்கே புதுக்கோட்டை மாவட்டத்தில் பல ஆதி இரும் புக் காலத் தொல்லியல் தலங்கள் கண்டறியப் பட்டுள்ளன. இவை நெற் பயிர்ச் செய்கைக்கு உகந்த இடங்களில் காணப்படுகின்றன என்பது கவனிக்கத்தக்கது.

காவேரிக்கு வடக்கே ஓடும் நதிகளான பொன்னையாறு மற்றும் பாலாறு ஆகியவை கர்நாடகத்து ஆதி இரும்புக் காலத் தலங்களையும் தமிழ்நாட்டுத் தலங்களையும் நேரடியாகத் தொடுக்க உதவின.

பேராசிரியர்
**கா. இந்திரபாலா**

இந்த இரு நதிகளாலும் வளம்படுத்தப் படும் தமிழ்நாட்டு நிலப் பகுதியில் கர்நாடகத்தில் கிடைத்தவை போன்ற பல்வகைச் சவ அடக்கங்கள் பரவலாகக் காணப்படுகின்றன. இவற்றை ஆய்வு செய்யும் போது இற்றைக்கு 2500 ஆண்டுகளுக்கு முன் இருந்து இந் நிலப் பகுதியில் மக்கள் தொகை பெருகத் தொடங்கியமைக்கும் விவசாய வளர்ச்சிக்கும் குளநீர்ப்பாசன வளர்ச்சிக்கும் சான்றுகள் காணப்படுகின்றன. (தொடரும்)



நல்லூர் பிரதேச சபையினால் நடத்தப்பட்டு வரும் " மக்களை நோக்கி" தொடர் நிகழ்வு அண்மையில் நல்லூர் வடக்கு சனசமூக நிலையத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் ஆதனவரி பெயர் மாற்றம், மருத்துவ பரிசோதனைகள், கட்டட விண்ணப்பம் தொடர்பான சேவைகள் இடம் பெறுவதைப் படங்களில் காணலாம்.

# இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பகால தமிழ் பத்திரிகைகளும் - யாழ்ப்பாணமும் 5

'*ஆத்மபோதினி* என்ற பத்திரிகையானது, 1907 ஆம் ஆண்டிலிருந்து வெளிவந்தது. இப் பத்திரிகையின் ஆசிரியர்,மற்றும் பிற விடயங்கள் பற்றி அதிகம் விபரங்கள் கிடைக்கவில்லை. இது வாரப் பத்திரிகையாக, மாதம் நான்கு தடவைகள் பிரதி திங்கட்கிழமைகளில் வெளிவந்திருந்தது.

கீழைத்தேச தேசிய உணர்வும், ஐரோப்பிய நாகரிக மேலாதிக்கத்திற்கு எதிரான உணர்வும் இப் பத்திரிகை வரிகளில் தென்பட்டன.

'*குருசந்திரோதயம்*' என்ற பத்திரிகை மாதமிருமுறை குரு வாரங்களில் வெளியிடப் பட்டது.இப் பத்திரிகையின் பத்திராதிபராக வ.மு.இரத்தினேசுவர ஐயர் செயலாற்றியிருந்தார். இப் பத்திரிகை எஸ்.ஏ.செல்வதுரைப் பிள்ளை என்பவரால் திருமகள் விலாச யந்திரசாலையில் இருந்து வெளியிடப் பட்டது.1910 ஆம் ஆண்டில் இப் பத்திரிகையின் மூன்றாவது தொகுதி வெளிவந்த காரணத்தினால், இப் பத்திரிகை 1907 ஆம் ஆண்டில் இருந்து வெளி வந்திருக்க வேண்டும்.

1910 ஆம் ஆண்டு வைகாசி மாதத்தில் இருந்து '*விஜயலட்சுமி*' என்ற பத்திரிகை வெளிவந்தது. இது பூரணை, அமாவாசை ஆகிய திதிகளை மையமாகக் கொண்டு மாதமிருமுறை பிரசுரிக்கப்பட்டது. ஆரம்பத்தில் பூரணை திதியில் மாதமொருமுறை மட்டும் பதிப்பிக்கப்பட்டுப் பின்னர் கையொப்ப நேயர்களின் விருப்பப்படி, மாதமிருமுறை பிரசுரமாகியதாக பத்திரிகை மூலம் அறிய முடிகிறது.

இப் பத்திரிகையின் ஆசிரியர் சு.முருகேச பிள்ளை என்பதும், அவர் சோதிட வல்லுநர் எனவும் அறியமுடிகிறது. இப் பத்திரிகையின் முகவரி திருநெல்வேலி கிழக்கு,கொன்றலடி வைரவஸ்வாமி. கோயில் வடக்கு வீதியில் அமைக்கப்பட்டிருக்கும் 'சரவணபவ' வித்தியா சாலை என அறிவிக்கப்பட்டிருந்தது.

இதன் மனேஜராக இ.சி.விநாயக முதலியார் செயற்பட்டிருந்தார். இவர் யாது காரணத்தினாலோ விஜயலட்சுமி பத்திரிகையை விட்டு விலகினார். '*விஜயலட்சுமி*' பத்திரிகை தொடர்ந்து சில காலம் சு.முருகேசபிள்ளையால் நடத்தப்பட்டது.

அவர் தமது பத்திரிகைக் காரியாலயத்தை கடற்கரைத் தெரு,சீதாரி, யாழ்ப் பாணம் என மாற்றிக் கொண்டார். அத்துடன் பத்திரிகையில் வெளியிட்ட அறிவிப்பில் இ.சி.விநாயக முதலியை, சில தவறுகள் காரணமாக இப் பத்திரிகையினின்றும் நீக்கி விட்டோம்.

இவ் விஜயலட்சுமிப் பத்திரிகையைப் போல அவர் ஒரு பத்திரிகையைத் தொடங்கி நடத்துகிறார் என எழுதப்பட்டுள்ளது.

1910 ஆண்டு மாசி மாதத்தில், '*மஹா விஜயலட்சுமி*' என்ற பத்திரிகை வெளி வந்துள்ளது. இப்பத்திரிகையின் மகுட வாக்கியமாக '*பொங்கு தமிழ்ச் செல்வப் பொருள் வளரப் பூங்கமல மங்கைபதமெப் பொழுதும் வாழ்த்து*' என்ற சொற்றொடர் எழுதப்பட்டுள்ளது. இப்பத்திரிகை செங்குந்தர் வீதி, திருநெல்வேலி கிழக்கை முகவரியாகக் கொண்ட இ.சி.விநாயக முதலியார் என்பவரால் நடத்தப்பட்டது.

'*சண்முகநாதன்*' என்ற பத்திரிகை நல்லூரில் இருந்து வெளியிடப்பட்டது. இப் பத்திரிகையில் தமிழ்த் திகதி பதியப்பட்டுள்ள அதேவேளையில், இந்தோ அராபிய எண்களிலும் திகதி பதிவு செய்யப்பட்டுள்ளது. மாதமிருமுறை பிரகடனமாகும் எனப் பத்திரிகையிற் குறிப்பிடப்பட்டுள்ளது.

1911 ஆம் ஆண்டில் ஜுன் மாதத்தில் வெளிவந்த "*மஹா விஜலட்சுமி*" இதழில் '*சண்முகநாதன்*' வெளியிடப்படுவதற்கான விளம்பரம் வெளியாகியுள்ளது. இதனால் அப்பொழுது 1911 இல் வெளிவரத் தொடங்கி யிருக்க வேண்டும்.சண்முகநாதனில் , இந்து சாதனம் பத்திரிகையின் குறைகளைச் சுட்டிக் காட்டி எழுதியிருந்ததுடன், சரவண முத்துப் புலவர் என்பவருக்கு நியாயமாக நடக்கவில்லை என்ற குற்றச்சாட்டும் முன் வைக்கப்பட்டிருந்தது. சரவணமுத்துப் புல வரின் ஆளுமையையும், ஆதங்கத்தையும் வெளிப் படுத்தும் நீண்ட சுய நியாயக் கடிதம் ஒன்றும் வெளியாகி இருந்தது.

'*விஜயபானு*' (Wijayabhanoo) என்ற பத்திரிகையின் நான்காவது புத்தகம் 1916 இல் வெளியிட்ட பிரதி காணமுடிகிறது.

**திருமதி சோ. கிருஷ்ணகுமார்**
சிரேஷ்ட விரிவுரையாளர், வரலாற்றுத்துறை,
யாழ். பல்கலைக்கழகம்.

இது 1912 ஆம் ஆண்டில் வெளியாகத் தொடங்கியிருந்தது எனக் கொள்வதற்கு இடமுண்டு.

இப்பத்திரிகையின் வெளியீட்டுத் திகதி, பத்திரவிகிதம் போன்ற விடயங்கள் யாவும் இந்தோ அராபிய எண்களாலே குறிப்பிடப்பட்டிருப்பதுடன், அது முன்னைய பத்திரிகைகளில் இருந்து வேறுபட்டதாக அமைந்துள்ளது. (தொடரும்)

1ம் பக்கத் தொடர்ச்சி..

# கொமர்ஷல் வங்கியே! உலகின் உச்

# இணைக்கப்பட்டுள்ள முதலா

நிதியியல் துறையில் நிதி உறுதிப்பாட்டை அளவிடும் காரணியான படி ஒன்று மூலதனத்தின் உறுதியான அடித்தளம், ஸ்திரத்தன்மை, மூலதன நி வங்கி தெரிவு செய்யப்பட்டுள்ளது. இவ்வாறான உலகின் தலைசிறந்த வங்கி தரப்படுத்தலுக்கு

உலகின் நிதித்துறை சமூகம் உலகில் உயர் ஸ்தான வங்கி தரப்படுத்தல் பட்டியலை கூர்ந்து அவதானித்த வண்ணம் இருக்கின்றது. இத்தர

இவ்வாறான தரப்படுத்தல் எமது வாடிக்கையாளர்களுக்கு சிறந்ததொரு உறுதிப்பாட்டினை மீள வலியுறுத்தும் அதேசமயத்தில், இவ்விருது எ

## விளையாட்டு நிகழ்வுகள் சம்பந்தமான கூட்டம்

(சாவகச்சேரி)

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் இவ்வருடம் நடத்தப்படவுள்ள விளையாட்டு நிகழ்வுகள் சம்பந்தமான கூட்டம் நாளை திங்கட்கிழமை பி.ப. 1 மணிக்கு சாவகச்சேரி மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

விளையாட்டுத்துறைக்குப் பொறுப்பான ஆசிரியர்களை தவறாது கலந்து கொள்ளும்படி தென்மராட்சி வலயக்கல்விப் பணிப்பாளர் கு.பிறேமகாந்தன் கேட்டுள்ளார். (ஓ-29)

## கூடைப்பந்தாட்ட சுற்றுப் போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட கூடைப்பந்தாட்டச் சங்கத்தினால் பதிவு செய்யப்பட்ட கூடைப்பந்தாட்ட கழகங்களுக்கிடையில் நடாத்தப்பட்டுவரும் கூடைப்பந்தாட்ட சுற்றுப் போட்டியின் அரையிறுதி ஆட்டங்கள் கொக்குவில் இந்துக்கல்லூரி கூடைப்பந்தாட்ட திடலில் நடைபெறவுள்ளன.

இவ் ஆட்டத்தில் இன்று ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 4 மணிக்கு ஜொலிஸ்ரார் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து கே.சி.சி.சி. விளையாட்டுக்கழகமும் நாளை திங்கட்கிழமை பிற்பகல் 4 மணிக்கு சென்றலைட்ஸ்சொக்ஸ்விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து D.E மசணட் விளையாட்டுக்கழகமும் மோதவுள்ளன. (ஓ-2)

## இலங்கையர் இருவருக்கு சவூதியில் மரண தண்டனை

இலங்கையர் இருவருக்கு சவூதி அரேபியாவில் நேற்று முன்தினம் மரண தண்டனை நிறைவேற்றப்பட்டுள்ளது. கணக்காளர் ஒருவரை கொலை செய்ததுடன் அவரிடமிருந்து பணத்தை கொள்ளையிட்டார்கள் என்ற குற்றச்சாட்டின் பேரில் மரண தண்டனை வழங்கப்பட்டுள்ளது.

சூடானியரான மேற்படி கணக்காளர் வங்கியிலிருந்து பணத்துடன் வெளியில் வரும் போதே இலங்கையர் இருவரும் அவர் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்துவிட்டு பணத்தை கொள்ளையிட்டுச் சென்றள்ளதாக தெரியவருகின்றது.

அத்துடன் அந்நாட்டு வங்கி ஒன்றின் முன்னாள் கொலை மற்றும் கொள்ளை சம்பவங்கள் இடம் பெற்றமைக்கு இவர்களே காரணம் என சவூதி அரேபிய காவல் துறையினர் தெரிவித்துள்ளனர்.

சவூதி அரேபியாவில் பாலியல் வல்லுறவுகள் மற்றும் கொலைச் சம்பவம் போன்ற குற்றச் செயல்களுக்கு மரணதண்டனையே விதிக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

இதன்படி கடந்தவருடத்தில் மாத்திரம் இவ்வாறு குற்றச்செயல்களில்ஈடுபட்ட 91பேருக்கு மரணதண்டனைகள் வழங்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஓ-4-6)

## வருடாந்த ஒன்று கூடல்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நகர சபையின் ஊழியர் நலன் புரிச்சங்க வருடாந்த ஒன்று கூடல் நிகழ்வு நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை சபை மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (ஓ-29)

## வருடாந்த பொதுக்கூட்டம்

(நல்லூர்)

இருபாலை தெற்கு கிராம அபிவிருத்திச் சங்கத்தின் வருடாந்த பொதுக்கூட்டமும் புது வருட நிர்வாகிகள் தெரிவும் இன்று ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 2 மணிக்கு இருபாலை தெற்கு பொது நோக்கு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இக் கூட்டத்தில் இருபாலை தெற்கு கிராம சேவையாளர் பிரிவிலுள்ள அங்கத்தவர்கள் அனைவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர். (ஓ-134)

## போராளிகளின் தற்போதைய பின்னடைவு கொரில்லாப் போராட்டத்தின் உதயமாகும்

## த.தே.கூ. எம்.பி என். ஸ்ரீகாந்தா

(கொழும்பு)

இந்தத் தோல்வி கொரில்லா போராட்டத்தின் உதயமாகும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு குறிப்பிட்டுள்ளது. எதிர்காலத்தில் தமிழீழ விடுதலைப்புலிகளை மரபு ரீதியான கொரில்லா தாக்குதல்களை பல பகுதிகளிலும் வலிந்து மேற்கொள்ளக்கூடும் என தெரிவித்துள்ளது. நிலப்பரப்புக்களை இழந்த போதிலும் விடுதலைப்புலி உறுப்பினர்கள் அர்ப்பணிப்புடன் போராட்டத்தை முன்னெடுப்பர் என குறிப்பிட்டுள்ளது.

எதிர்காலத்தில் கொரில்லா யுத்தம் வெடிப்பதனை எவராலும் தடுக்க முடியாதென தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் என். ஸ்ரீகாந்தா தெரிவித்துள்ளார்.

யுத்தம் முடிவடைந்துவிட வில்லை எனவும் விடுதலைப்புலிகள் குறிப்பிட்டுக் கூறக் கூடியளவு ஓர் நிலப்பரப்பை இன்னமும் தம் வசம் வைத்திருப்பதாகவும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார். எனவே அரசாங்கம் புத்தி சாதூரியமாக செயற்பட்டு உடனடியாக யுத்த நிறுத்தத்தை அமுல்படுத்தி அரசியல் ரீதியான தீர்வின் மூலம் நீண்டகாலமாக தொடரும் யுத்தத்திற்கு தீர்வு காண வேண்டும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த மாதிரியான போராட்டங்களுக்கு ஒரு போதும் முற்றுப் புள்ளி கிடையாது இரு தரப்பினாலும் எட்ப்படும் இணக்கப்பாடே இவ்வகைப் போராட்டங்களின் முடிவாக கருதப்பட வேண்டும் என அவர் தெரிவித்துள்ளார்.

இந்த நாட்டு மக்கள் இதுவரையில் இரத்த வெள்ளத்தில் நனைந்தது போதுமானதென அவர் குறிப்பிட்டுள்ளார். (ஓ-6)

## கிளிநொச்சியில் இருந்து பின்வாங்கியதால் போர் ஓய்ந்து விட்டதாக கருதிவிடமுடியாது

## விடுதலைச் சிறுத்தைகள் தலைவர் திருமாவளவன்

(கொழும்பு)

விடுதலைப் புலிகள் பின்வாங்கிய நிலையில் கிளிநொச்சியை கைப்பற்றி உள்ளதாக சப்தமிடுகின்றர் கிளிநொச்சியே போரின் எல்லையாக மாறிவிடாது என்றும் தமிழ் இனத்திற்கு மத்திய அரசு பச்சைத் துரோகம் செய்துவிட்டதாகவும் விடுதலை சிறுத்தைகளின் அமைப்பின் தலைவர் திருமாவளவன் கூறியிருக்கிறார்.

இது குறித்து திருமாவளவன் வெளியிட்டுள்ள அறிக்கையில் தமிழீழத்தின் தலை நகராக இயங்கிய கிளிநொச்சியை சிங்களப் படை கைப்பற்றிவிட்டதென ராஜபக்ஷவும் தமிழின விரோதிகளும் கும்மாளம் அடிக்கின்றனர். ஆறேழுநாடுகளின் படைத்துணையோடு ஆறேழு மாதங்களாக பெரும்பாடுபட்டு தற்போது புலிகள் பின்வாங்கிய நிலையில் ஆயிரக்கணக்கான சிங்கள வீரர்களை பலிகொடுத்தும் அப்பாவித் தமிழர்களை கொன்றுகுவித்தும் கிளிநொச்சியை கைப்பற்றியுள்ளோம் என்று உரத்துக்கூறுகின்றனர். இந்த நிகழ்வால் புலிகள் வீழ்ந்துவிட்டதாகவும் போர் ஓய்ந்துவிட்டதாகவும் கருதிவிட முடியாது.

சிங்கள படையினரை விரட்டியடித்து பல பகுதிகளை கைப்பற்றுவதும் பின்னர் கைவிடுவதும் புலிகளின் வரலாற்றில் அவ்வப்போது நடக்கும் நிகழ்வுகளே ஆகும். ஆகவே பின்வாங்கல் என்பது பின்னடைவு ஆகாது இந்த கும்மாளத்திறக்கும் கொண்டாட்டத்திற்கும் தமிழ் இனத்திற்கு எதிராக இந்திய அரசின் பச்சைத் துரோகமே முதன்மையானதாகும்.

விடுதலைப்புலிகளோடு தனியாக மோதவக்கில்லாத இலங்கை அரசு இந்திய அரசு உள்ளிட்ட பல்வேறு நாடுகளின் துணையோடு ஒற்றையாய் எதிர்த்து நிற்கும் விடுதலைப் புலிகளை பின்வாங்கச் செய்திருப்பது பெரிய வெற்றியாகாது; வெட்கக்கேடாகும். தாம் எதிர்பார்த்தது. நடந்து விட்டதெனவும் தமது கனவு பலித்துவிட்டதெனவும் இந்திய அரசு மகிழ்ச்சியடையலாம். பத்து கோடி தமிழர்களின் உணர்வுகளை அவமதித்துவிட்டு சிங்களவர்களுக்கு முட்டுக்கொடுக்கும் இந்திய அரசின் துரோகப் போக்கை எந்தக்காலத்திலும் தமிழ்ச் சமூகத்தால் மன்னிக்க முடியாது.

தமிழ் இனத்தின் முதுபெரும் தலைவரும், தமிழக முதல்வருமான கருணாநிதியின் தலைமையில் தமிழக அனைத்துக் கட்சித் தலைவர்கள் இந்திய தலைமை அமைச்சரை நேரில் சந்தித்துஈழத்தில்நடக்கும் இனப்படுகொலையை தடுத்து நிறுத்த முறையிட்டு ஒருமாத காலம் உருண்டோடிவிட்டது.

வெளிவிவகாரத்துறை அமைச்சர் விரைவில் கொழும்பு சென்று அதற்கான முயற்சிகளை மேற்கொள்வார் என உறுதியளித்தும் கூட இதுவரையில் அற்கான முனைப்பு ஏதுமில்லை என்பதில் இருந்து இந்திய அரசின் உள்நோக்கம் என்னவென்பது வெளிப்பட்டிருக்கிறது. இந்திய ஆட்சியாளர்களின் இத்தகைய தமிழின துரோகத்தை ஒட்டு மொத்த தமிழ்ச் சமூகமும் உணர்ந்து கொள்ள வேண்டும் என்பதை இந்தச் சூழலில் விடுதலைச் சிறுத்ததைகள் சுட்டிக்காட்டுகிறது.

கடைசித்தமிழன் என்கிற கடைசி புலி உள்ள வரையில் அங்கே விடுதலைப் போர் தொடரும் என்பதில் ஐயமில்லை. இனப்பகையும், துரோகமும் வீழ்த்தப்பட்டு ஈழம்வென்றெடுக்கப்படும் என்கிற நம்பிக்கை இனமான உணர்வுள்ள ஒவ்வொரு தமிழனுக்கும் உள்ளது.

“மரபு வழிப் போர்” முறையிலிருந்து “கொரில்லா போர்’ முறைக்கு புலிகள் மாறும் நிலை ஏற்படுமே தவிர கிளிநொச்சியே போரின் எல்லையாக மாறிவிடாது என்பதை சிங்கள அரசை தாங்கிப்பிடிக்கும் இந்திய அரசுக்கு காலம் விரைவில் உணர்த்தும் என்று கூறியுள்ளார். (ஓ-6)

## கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

மீள் பரிசீலனைக்க அழைக்கப்பட்டு இதுவரையும் நியமனம் கிடைக்காதவர்கள் கௌரவ அமைச்சரைச் சந்திப்பதற்கான நேரம் ஒதுக்கப்பட்டிருப்பதால் நியமனம் கிடைக்காத அனைவரையும் நாளை திங்கட்கிழமை காலை 7.30 மணிக்கு பெருமாள் கோவிலடியில் ஒன்று கூடுமாறு பட்டதாரி செயற்குழு கேட்டுக்கொள்கிறது. (ஓ)

# 2009 ஆம் ஆண்டு உங்களுக்கு எப்படி?

## விருச்சிகம்

ஆங்கிலப் புத்தாண்டில் விருச்சிகராசிக் காரர்கள் ஏமாற்றங்களிலிருந்து விடுபடு வீர்கள். அதேநேரம் மனதில் தைரியமி ன்மையும், சோம்பலும் சிறிது குடிகொள் ளும். உங்களின் தேக ஆரோக்கியம் பொது வாக இந்த ஆண்டு முழுவதும் நன்றாக இருக்கும். ஆனாலும் சிலருக்கு இரத்தம் சம்பந் தப்பட்ட கோளாறுகளும் ஜுரம், கட்டி போன்றவையும் உண்டாகும்.

அரசாங்கத்திலிருந்து சலுகைகளைப் பெறுவீர்கள். தாயின் மூலமும் , அவரின் உற வினர்களின் மூலமும் எதிர்பார்த்த ஆதர வுகள் கிடைக்கும். குடும்பப் பாரம்பரியப் பெருமை காப்பாற்றப்படும். கொடுத்த வாக் கை எப்பாடுபட்டாவது நிறைவேற்றி விடுவீர் கள். மேலும் கடன் தொல்லைகளிலிருந்தும் விடுபடுவீர்கள். சிலருக்கு வீடு மாற்றம், இட மாற்றம் ஏற்படும்.

வரும் ஆண்டு மே மாதம் முதல் ஜுலை மாதம் வரையில் தொழில் ஸ்தானத்தில் அமர்ந்துள்ள சனி பகவானை சுக ஸ்தானத் திலிருந்து குருபகவான் பார்வை செய்வதால், தொழிலில் அனாவசியச் செலவுகள் ஏற் படாது. சிரமங்களுக்கிடையே ஓரளவுக்கு இலாபங்களைப் பார்ப்பீர்கள். நீங்கள் சார்ந் துள்ள துறையில் பிரபலம் அடைவீர்கள். இழப்புக்கள் ஏற்படத் தொடங்கும் போதே விழிப்படைந்து, காரணத்தை அறிந்து சரி செய்து விடுவீர்கள்.

செப்ரெம்பர் மாதத்திலிருந்து ஆண்டு இறுதி வரை சனி பகவான் லாப ஸ்தானத்தில் பலம்பெற்று, குரு பகவானால் பார்க்கப்படு கிறார். இதனால் உங்களின் தோற்றப் பொலிவு மெருகேறும் அடுத்தவர்களின் பிழைகளைச் சரியாக எடை போட்டுத் திருத்துவீர்கள். உங் களின் பொறுப்புகளைச் செவ்வனே செய்து முடிப்பீர்கள் வசதி, வாய்ப்புக்களை நேர்த்தி யாகப் பெருக்கிக் கொள்வீர்கள். உங்களின் நடத்தை மூலம் பலருக்கு முன்னுதாரணமா கத் திகழ்வீர்கள். மேலும் தொலைதூரப் பயணங்களை மேற்கொண்டு, புதிய அனு பவங்களையும் பெறுவீர்கள்.

உத்தியோகஸ்தர்களுக்கு அலைச்சலும், வேலைப்பளுவும் அதிகரிக்கும். உங்களின் பணிகளை மேலதிகாரிகள் பாராட்டுவார்கள். உங்கள் ஆற்றல் அதிகரிக்கும். அலுவலக ரீதியான பயணங்களில் பண வரவு உண் டாகும். அதேசமயம் சக ஊழியர்களை நம்பி, எந்த வேலையையும் ஒப்படைக்க வேண் டாம். சிலருக்கு இந்த ஆண்டு விரும்பத்தகாத இடமாற்றங்களும் உண்டாகலாம்.

வியாபாரிகளைப் பொறுத்தவரை விற்பனையில் நிலவி வந்த போட்டி, பொறா மைகள்குறைந்து சுமுக நிலைமை உண் டாகும். அதே சமயம வரவு–செலவு விஷயத் தில் கவனமாக இருந்து வியாபாரத்தை விரிவுபடுத்தவும் மற்றபடி கொடுக்கல், வாங் கலில் இருந்த சிரமங்கள் மறையும். இருந் தும் சில நேரங்களில் நண்பர்களிடமும், கூட்டாளிகளிடமும் மனக்கசப்புகள் உண்டா கலாம். எனவே புதிய முயற்சிகளில் ஈடுபடும் போது உங்கள் செயல்களை வெளிப்படை யாகச் செய்யவும்.

விவசாயிகளுக்கு எதிர்பார்த்த விளை ச்சல் கிடைக்காது. எல்லாக் காரியங்களிலும் தடை யுடன் கூடிய வெற்றிகிடைக்கும். நன்கு ஆராய்ந்த பிறகே புதிய நிலங்களை வாங் கவும். அதேநேரம் காய்கறி விற்பனையிலும் பால்வியாபாரத்திலும் லாபங்களைக் காண லாம். மற்றப்படி குடும்பத்தில் சுபச் செலவுகள் உண்டாகும்.

அரசியல்வாதிகளுக்கு மன அமைதி சற்றே குறையும். வீண் அலைச்சல்களையும் சந்திக்க நேரிடும். சரியான நேரம் பார்த்து , உங்களுக்கு அவ மரியாதை ஏற்படலாம். முகம் தெரியாதவர்கள் கூட இக் கட்டான நேரத் தில் உங்களுக்கு உதவி செய்வார்கள்.

கலைத் துறையினருக்கு பெயரும் ,புக ழும் வளரும். உங்களின் திறமைகளால் அனைவரையும் அசத்துவீர்கள். கலை நிகழ் ச்சிக்காக வெளியூர் பயணங்களை மேற் கொண்டு நன்மை அடைவீர்கள்.

இந்த ராசி பெண்மணிகளுக்கு கணவ ரிடம் அன்பும் ,பாசமும் அதிகரிக்கும். ஆடை , ஆபரணச் சேர்க்கை உண்டாகும். குடும்பத் தில் ஒற்றுமை தழைக்கும். அதேசமயம் உற் றார், உறவினர்கள் உங்களின் பேச்சைக் குறை சொல்லுவார்கள்.

**ஜோதிடர் கே.சி.எஸ். ஐயர்**

இதனால் அவர் களிடம் மனம் திறந்து பேச வேண்டாம். மற்றபடி இந்த ஆண்டு குழந்தைகளால் பெருமை அடைவீர்கள்.

மாணவமணிகள் உழைப்புக்கேற்ற நல்ல மதிப்பெண்களைப் பெறுவீர்கள். பெற்றோர் களின் ஆதரவு கிடைக்கும்.

அவர்களால் உங்களின் கோரிக்கைகள் நிறைவேறும். சக மாணவர்களின் ஒத்துழைப் பையும் பெறுவீர் கள். அதே சமயம் அவர் களுடன் வீண்வாக்கு வாதங்களில் ஈடுபடுவதைத் தவிர்க்கவும். உடல் நலம் சீராக ,தினமும் உடற்பயிற் சிகளை மேற்கொள் ளவும்.

**பரிகாரம்**

சங்கடங்கள் ஏற்படும் போதெல்லாம் ஸ்ரீராமரை வழிபட்டு வரவும். மேலும்' ராம ராம' என்று நேரம் கிடைக்கும் போதெல்லாம் ஜெபித்து வர , நலம் விளையும். (வளரும்)

# சென்னை வரும் பிரதமருக்கு எதிராக கறுப்புக்கொடி ஆர்ப்பாட்டம்

## நெடுமாறன் அறிவிப்பு



(சென்னை)

சென்னைக்கு வரும் பிரதமர் மன் மோகன் சிங்கிற்கு எதிராக கறுப்புக் கொடி ஆர்ப்பாட்டம் நடைபெறும் என்று "தமிழீழ விடுதலை ஆதரவாளர் ஒருங் கிணைப்புக் குழு'' வின் ஒருங்கிணைப் பாளர் பழ.நெடுமாறன் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து வெள்ளிக்கிழமை அவர் வெளி யிட்ட அறிக்கையில், இலங்கையில் தொடர்ந்து தமிழர்கள் படுகொலை செய்யப்படுவதைக் கண்டித்து ஒட்டு மொத்த தமிழகமும் கட்சி வேறு பாடின்றி குரல் எழுப்பியும் மத்திய அரசு செவி சாய்க்கவில்லை. இலங்கையில் உடனடியாக போர் நிறுத்தம் ஏற்படவேண்டும். இலங்கைக்கு இந்திய அரசு ஆயுத உதவி செய்யக் கூடாது என்று தமிழகத் தில் உள்ள அனைத்துத் தரப்பினரும் விடுத்த வேண்டுகோளையும் மத்திய அரசு பொருட்படுத்தவில்லை.

இதற்கு கடும் எதிர்ப்புத் தெரிவிக்கும் வகை யில் எதிர்வரும் ஜனவரி 7 ஆம் திகதி சென்னை க்கு வரும் பிரதமர் மன்மோகன் சிங்கிற்கு எதிரா கக் கறுப்புக்கொடி ஆர்ப்பாட்டம் நடத்த 'தமிழீழ விடுதலை ஆதரவாளர் ஒருங்கிணைப்புக் குழு' முடிவு செய்துள்ளது என்று பழ.நெடுமாறன் தெரிவித்துள்ளார். (ஓ-6)




இன்று ஈழத்து சிதம்பர செளந்தராம்பிகை சுந்தரேஸ்வரப் பெருமான்
திருவெம்பாவை (4ஆம் நாள்) 2009.01.04 ஞாயிற்றுக்கிழமை

திண்ணபுரம் மேவி இருப்பவனை எண்ணத்தில் இருத்துவோம்

பிட்டுக்கு மண் சுமந்த பெருமானை மனையாட்டி
கட்டுக்குள்கைகட்டி நின்றானை கணக்கின்றிப்
பிரம்படிகள் பெற்றானை பேசும் திரு வாசகத்தில்
தரம் காத்துவாழ்வானை தமிழ்காத்து ஆள்வானை
இடுகாட்டில் கூத்தாடி இரவெல்லாம் அலைவானை
இடும்பா வனத்தில் இறையாகிக் காப்பானை
முல்லை மலர்போல முத்தமிழைப் பூப்பானைத்
தில்லைப் பெருமன்றில் திருநடனம் செய்வானை
திண்ணபுரம் மேவியிருப்பானை எண்ணத்தில் இருத்துவோம்.

மதுரகவி.காரை.எம்.பி.அருளானந்தன்

(2059)


# கிளிநொச்சி விழுந்த செய்தி கேட்டு — நெஞ்சில் இடி விழுந்தது

## கவிஞர் வைரமுத்து



(கொழும்பு)

கிளிநொச்சி வீழ்ந்துவிட்டது என்ற செய்தி கேட்டு நெஞ்சில் இடி விழுந்தது என்று பிரபல கவிஞர் வைரமுத்து தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை இடம் பெற்ற 'என் தம்பி வைரமுத்து' நூல் வெளி யீட்டின் ஏற்புரையாற்றிய அவர் மேலும் தெரிவித்ததாவது, இன்று கிளிநொச்சி விழுந்து விட்டது என்ற செய்தி வருகிறது. நெஞ்சில் இடி விழுகிறது. ஒரு தமிழன் தமிழ் சகோதரி அங்கு அடிபடுகிற போது எனக்கு குளிப்ப தற்கோ உண்பதற்கோ சிரிப்பதற்கோ தோன்ற வில்லை. கிளிநொச்சி வீழலாம். 'கிலி' விழ லாம். ஆனால் புலி விழமாட்டார்கள். அவனும் சேர்த்து தான் தமிழர். அவன் நம் இரத்தத்தின் நீட்சி. அவனை இழப்பதற்கு நாம் தயாராக முடியாது.

நாங்கள் போர் நிறுத்தம் வேண்டும் என்று கேட்கிறோம். பிரணாப் முகர்ஜி இலங்கைக்கு செல்லவேண்டும் என்று கேட்டுக்கொண் டோம்.

அங்கே போர் முனைக்கு செல்லுமாறு வேண்டிக்கொண்டோம். இன்னும் காலம் கடந்து விட வில்லை.

இலங்கையில் போர் நிறுத்தத்தை எவ் வளவு வலியுறுத்துகிறோ மோ அதைப் போல இந்தியா வுக்கும்– பாகிஸ்தானுக்கும் போர் வந்துவிடக்கூடாது என்பதும் முக்கியம். பொருளாதார சீரழிவு வந்து கொண்டிருக்கும் நேரத்தில் இன்னொரு போரை உலகம் தாங்காது.

பாகிஸ்தானில் தீவிரவாத முகாம்கள் ஒழிக்கப்படவேண்டும். போர் மூலம்தான் அது நிறைவேற்றப்படவேண்டும் என்பதில் எனக்கு உடன்பாடில்லை என்றார். (ஓ-6)

# ஈழத் தமிழர்களைக் காப்பதற்கு அனைவரும் வீறு கொண்டு எழுங்கள்!

## புத்தக வெளியீட்டு விழாவில் கனிமொழி வேண்டுகோள்



(கொழும்பு)

ஈழத் தமிழர்களை காப்பதற்கு அனை வரும் வீறுகொண்டு எழுங்கள் என திராவிட முன்னேற்றக் கழகத்தின் நாடாளுமன்ற உறுப்பினரும் கவிஞருமான கனிமொழி வேண்டுகோள் விடுத்துள்ளார்.

கவிஞர் வைரமுத்துவின் புத்தக வெளி யீட்டு விழாக்களில் முதலமைச்சர் கருணாநிதி ஆற்றிய 11 இலக்கிய சொற்பொழிவுகளை தொகுத்து உருவாக்கிய "என் தம்பி வைர முத்து" என்ற புத்தக வெளியீட்டு விழா சென் னையில் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

விழாவுக்கு குன்றக்குடி பொன்னம்பல அடிகள் தலைமை தாங்கி புத்தகத்தின் முதல் பிரதியை வெளியிட நாடாளுமன்ற உறுப் பினர் கவிஞர் கனிமொழி பெற்றுக்கொண் டார்.

நிகழ்வில் கவிஞர் கனிமொழி உரையாற் றிய போது, தமிழர்கள் எப்போதுமே தங்க ளுடைய கடந்த கால பெருமைகளில் ஆழ்ந்து அதைப் பற்றி மட்டுமே பேசிக்கொண்டிருப்ப வர்களாக இருக்கின்றனர். கிளிநொச்சி வீழ்ந்து விட்டது என்ற செய்தி இன்று காதில் விழுந் தது. அங்கு ஒரு இனம் மெல்ல அழிக்கப் பட்டு கொண்டிருக் கிறது.

ஆனால் அதனை மறந்து அதனை தாண்டி ஏதேதோ தேடல்களில் நம்மை தொலைத்துக்கொண்டி ருக்கின்றோம். நம்முடைய சகோதரர்களும் சகோதரிகளும் அங்கு வாழும் வகையற்று அழிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றனர். அந்த பிள்ளைகளுக்கு எதிர்காலம் என்ன என்பதே தெரியாத நிலை உருவாகிவிட்டது.

எது நடக்காது என்று நம்பிக்கொண் டிருந்தோமோ? அது இன்று நடைபெற்று விட்டது. நாம் இன்னும் பழங்கதைகள் பேசிக் கொண்டிருப்பதில் பலனில்லை. இதற்காக இந்த படுகொலைகளை எதிர்த்து இன அழிவை எதிர்த்து நாம் அனைவரும் ஒன்று பட வேண்டும். தயவு செய்து வீறு கொண்டு எழுங்கள் நம்முடைய சகோதரர்களுக்காக தொப்புள் கொடி உறவுகளுக்காக குரல் கொடுங்கள் என அவர் வேண்டுகோள் விடுத் துள்ளார். (ஓ-6)



# Lifeline
# மீண்டும் வாழ்வோம்

இடம்பெயர்ந்த மக்களுக்கான மனிதாபிமான தகவல் பரிமாற்றம்

Humanitarian Information For IDPs

## புது விடியல் தருமா புது வருடம்?

புது வருடம் புதிய எதிர்பார்ப்புக்கள் பல வற்றை ஏற்படுத்துயவாறு மலர்ந்துள்ளது. குறிப்பாக இடம்பெயர்ந்த இன்னல் நிறைந்த வாழ்வை வாழும் மக்கள் மலர்ந்துள்ள புதிய ஆண்டில் தங்கள் துயர வாழ்விற்கு முற்றுப் புள்ளி வைக்கப்பட வேண்டும் என்ற எதிர்



பார்புகளை மனதில் தாங்கி நிற்கின்றனர்.

மனித மனங்களின் உணர்வுகளை உண ராத யுத்தம் கந்தக காற்றை உமிழ்ந்தவாறு புதிய ஆண்டில் தனது பயனத்தை தொடர் கின்றது.

முல்லைத்தீவில் கடந்தவாரம் பெய்த மழை ஓய்ந்த போதிலும் அதன் பாதிப்புக்கள் தொடர்வதாக அங்கிருந்து கிடைக்கும் தக வல்கள் தெரிவிக்கின்றன.

வன்னியில் தற்பொழுது 208169 பேர் இடம் பெயர்ந்துள்ளதாக 157 ஆவது IASC அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மழையினால் பாதிக்கப்பட்ட 25,000 குடும்பங்களுக்கு தற்காலிக குடியிருப்புக்கள் தேவைப்படுவதாக அரசாங்கதரப்புத் தகவல் களை மேற்கோள்காட்டி செய்திகள் வெளி யாகியிருந்தன.

மக்களின் தற்காலிக குடியிருப்புகளுக் கான தேவைகளைக் கருத்தில் கொண்டு அரசாங்கம் சில முயற்சிகளை முன்னேடுத் துள்ளதாக தெரியவந்துள்ளது.

இதன் முதல் கட்டமாக வன்னிக்கு அனுப்பி வைப்பதற்கான 2 இலட்சம் கிடுகுகளை வவு னியா அரசாங்க அதிபருக்கு பெற்றுத் தரு வதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட் டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

புத்தளம் மாவட்ட அரசாங்க அதிபர் 50,000 கிடுகுகளையும், வவுனியாவிலுள்ள SEED அமைப்பு ஒரு இலட்சம் கிடுகுகளை யும், மன்னார் மறை மாவட்ட ஆயர் இராயப்பு ஜோசப் ஆண்டகை அவர்கள் 50,000 கிடுகுகளையும் தருவதற்கு இணங்கியுள் ளார்.

கிடைக்கப்பெற்ற கிடுகளின் ஒரு தொகுதி ஏற்கனவே வன்னிக்கு அனுப்பிவைக் கப்பட்டுள்ளது. இனிவரும் நாட்களில் வந்து சேரும் கிடுகுகளை கட்டம் கட்டமாக லொறி களில் அனுப்புவதற்கு ஏற்பாடு செய்யப் பட்டுள்ளதாக வவுனியா மாவட்ட அரசாங்க அதிபர் சாள்ஸ் தெரிவித்தார்.

வன்னியிலுள்ள அரசாங்க அதிபர்கள் வவுனியாவில் இருந்து அனுப்பி வைக்கப் படும் கிடுகுகளை தேவைக்கேற்றவாறு பகிர் ந்தளிப்பதற்கு நடவடிக்கை எடுத்துள்ளனர்.

இதேவேளை வன்னியில் இருந்து கடந்த வாரம் 70 பேர் வவுனியா நோக்கி வருகை தந்துள்ளதாகவும் இவர்கள் மனிக்பாம் மற் றும் நெலுங்குளம் ஆகிய முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளதாகவும் அரசாங்க அதிபர் கூறினார்.

வன்னியில் இருந்து வவுனியாவிற்கு வருகை தந்த மொத்த 447 பேர் நலன்புரி நிலையங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். இவர்களுக்கான தங்குமிட உணவு மற்றும் அடிப்படைத் தேவைகள் அரசாங்க அதிபரால் வழங்கப்பட்டு வருவதாக தெரிவிக்கப்பட் டுள்ளது.

புது வருடத்தை முன்னிட்டு இடம் பெயர் முகாம்களிலுள்ளவர்களுக்கு பரிசுப் பொருட் களை வழங்குவதற்கும், தொலைக் காட்சிப் பெட்டிகள் வழங்குவதற்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

முல்லைத்தீவு மாவட்டத்தில் பெய்த கடும் மழையினால் மாவட்டத்தின் பயிர்ச்செய்கை பாரிய அளவில் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் இதனால் எதிர் காலத்தில் உணவுக்கு பாரிய நெருக்கடி ஏற்படும் என்றும் அச்சம் வெளி யிடப்பட்டுள்ளது.

முல்லைத்தீவில் தற்போது ஏறத்தாள 260,000 பேர் வாழ்ந்து வருவதாக தெரிவி க்கப்படுகின்றது. முல்லைத்தீவு வைத்திய சாலையிலுள்ள எட்டு வைத்தியர்களும் 14 தாதிமார்களும் 24 மணி நேரமும் தொடர்ச்சி யான சேவைகள் வழங்கி வருவதாகவும் முல்லைத்தீவு மாவட்ட தொற்று நோய்த் தடுப்பு வைத்திய அதிகாரி வைத்திய கலாநிதி ஒஸ்மன் கூறினார்.

வன்னியில் அண்மையில் பெய்த அடை மழையினால் பலர் பல்வேறு வகையான நோய்களுக்கு உள்ளாகியுள்ளனர். மக்கள் பொதுக்கட்டிடங்களில் வாழ்வதனால் அதிக நெரிசல் மிக்க சூழலில் வாழ வேண்டிய சூழ்நிலைக்கு உள்ளாகின்றனர்.

குளிப்பதற்கு ஏற்ற நீரின்றியும், குடிப்பதற் கேற்ற குடிநீரின்றியும் அவதியுறுகின்றனர். மலேரியா நோயினால் 44 பேர் பாதிக்கப்பட் டுள்ளனர்.

அத்துடன் வயிற்றோட்டம், வாந்திபேதி, காய்ச்சலினால் மக்கள் பெரிதும் அவதியுறு கின்றனர். மக்கள் வாழும் இடங்களில் துர் நாற்றம் வீசுகின்றது.

மக்கள் பலர் தோல் வியாதியினால் பாதிப் புற்றுள்ளனர். இத்தகைய சூழ்நிலையில் சுகாதார உத்தியோகத்தர்கள் பல முன்னெ டுப்பு நடவடிக்கையை மேற்கொண்டு வருகின் றனர்.

பொதுக்கிணறுகளில் குளோரின் இடப் பட்டு சுத்தமாக்கப்படுகின்றது. மக்களுக்குத் தேவையான அறிவுரைகளைத் தொடர்ச் சியாக வழீங்கிவருகின்றோம் என வைத்திய கலாநிதி ஒஸ்மன் சாள்ஸ் தெரிவித்தார்.

வன்னியிலிருந்து வவுனியா நோக்கி வரும் மக்களுக்காக தற்காலிக குடியிருப் புக்கள் செங்கலடி பிரதேச செயலகப் பிரிவில் கட்டப்பட்டு வருகின்றன.

2009 ஆவது வருட முதல் வாரத்தில் இவ் வீடுகள் வழங்கப் படுமென மீள் குடியேற்ற அனர்த்த நிவாரண சேவைகள் அமைச்சின் வவுனியா மாவட்ட ஒருங்கிணைப்பாளர் மௌலவி தாகீர் தெரிவித்தார்.

16அடிக்கு 12 அடி அளவில் இந்த வீடுகள் காற்றோட்டமுள்ளதாக அமைக்கப்பட்டு வரு வதாகவும் வவுனியாவிலுள்ள ஏனைய முகாம் களில் ஏற்பட்டது போன்ற அனர்த்தங்கள் ஏற்படாதவாறு தவிர்ப்பதற்கு அரை ஏக்கர் நிலப்பரப்பில் 5 குடும்பங்கள் மட்டுமே குடிய மர்த்தப்படவுள்ளதாகவும் தாகீர் குறிப்பிட்டார்.

இடம்பெயர்ந்த மக்க்ளுக்கு தேவையான அனைத்து வகையான சமையல் அறை உபகரணங்களும் வழங்கப்பட்டுள்ளன.

அவர்கள் இந்த இருப்பிடங்களில் தங்க வைக்கும் வரையிலான இடைக்காலப் பகு தியில் சமைத்த உணவு வழங்கப்படுகிறது. அவர்கள் குடியேறிய சில வாரங்களில் மின் சார இணைப்புக்களையும் வழங்குவதற் கான ஏற்பாடுகள் செய்யப்படுமெனவும் தாகீர் கூறினார்.

### 2009

மீண்டும் வாழ்வோம்
ஒரு வருடத்தைக் கடந்து புது
வருடத்தில்
உங்களுடன் 2009 இல் புதிய
எதிர்பார்ப்புகளுடன்
மலர்ந்திருக்கின்றது
கனவுகள் மட்டும் எங்கள்
எண்ணங்களைச் சொல்லும்
வாய்ப்பை காலம் எமக்குத்
தந்திருக்கின்றது.
எங்கள் எல்லைகளை நாங்களே
வரையறுத்து
எங்களால் முடிந்ததை உங்களோடு
பகிர்ந்து கொள்கின்றோம்.
உங்கள் வாழ்வில் மீண்டும் வசந்தம்
பூக்கும் என்ற
நம்பிக்கையுடன் புதுவருடத்தில்
உங்களுடன் நாங்கள்
மீண்டும் வாழ்வோம்.

### மீண்டும் வாழ்வோம்

"மீண்டும் வாழ்வோம்" திட்டமானது இலங்கையின் அசாதாரண சூழ்நிலைகளினால் இடம்பெயர்ந்து முகாம்களில் வாழும் மக்களுக்காகவும் மீள்குடியேறி உள்ள வர்களுக்காகவும் தகவல்களை வழங்கும் பரந்து பட்ட மனி தாபிமான செயற்றிட்ட அமைப் புக்களின் ஓர் அங்கமாகும்.

## உங்கள் கதைகள்

மீண்டும் வாழ்வோம் வானொலி நிகழ்ச்சி யில் உங்கள் கதைகள் இடம்பெறக் காத்திருக் கின்றன. ஒவ்வொரு நிகழ்ச்சியிலும் ஒலி பரப்பா கும் நாடகங்களின் தொகுப்பை மீண்டும் வாழ் வோம் பத்திரிகை வாயிலாகவும் உங்களுக்கு அறியத்தருகின்றோம். வடக்கு கிழக்குப் பகுதி களில் இருந்து பல்வேறு காரணங்களால் இடம் பெயர்ந்து முகாம்களில் வாழும் மக்களுக்கு சமூகத்தில் உள்ள கடமைகள் பற்றி எடுத்துக் கூறும் வகையில் *சமூகத்தின் கடமை* குறு நாடகம் அமைந்தது. குறுநாடகத்தின் தொகுப்பு கீழே தரப்படுகின்றது.

## சமூகத்தின் கடமை

மீண்டும் வாழ்வோம் வானொலி நிகழ்ச் சியில் உங்கள் கதைகள் பகுதியில் வாராவா ரம் குறு நாடக ங்கள் ஒலிபர ப்பாகி வருகின் றமை நீங்கள் அறிந்த விடய மே. எமது சமூ கத்தில் வெவ்



வேறுபட்ட இயல்புடைய மக்கள் வாழ்கின்றார்கள். மனித னாக பிறந்த ஒவ்வொரு வருக்கும் தகுந்த அங்கீகாரம் கொடுக்க வேண்டியது சமூகத்தின் கடமையாகும். எவரையும் விலக்கி வைக்கக் கூடாது. சமூகத்தில் அங்கவீனர்களுக்கு வழங் கப்படவேண்டிய உரிமைகள் அங்கீகாரம் தொடர்பாகவே கடந்த வாரம் மீண்டும் வாழ் வோம் நிகழ்ச்சியில் ஒலிப்பரப்பாகிய சமூ கத்தின் கடமை நாடகம் அமைந்தது.

வினோ மிதிவெடியில் சிக்கி இரண்டு கால் களையும் இழந்து விட்டாள். பாடசாலை செல் லும் போது சக மாணவர்களின் பேச்சினால் மனம் உடைந்து பாடசாலை செல்வதை நிறுத்தி விட்டாள். மற்ற மாணவர்கள் தன்னை நொண்டி யென்று அழைப்பதை வினோவால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. வினோவின் தாய் தனது பிள்ளையை நினைத்து தினமும் வேத னைப்படுகிறாள். பின்பு தொண்டர் நிறுவன ஊழியர் ஒருவரின் ஆலோசனையின் படி வினோ விசேட தேவைக்குட்பட்ட பிள்ளைகள் கல்வி கற்கும் பாடசாலைக்குச் சென்று படிக் கிறாள்.

இவ்வாறான சம்பவங்களை நீங்களும் அறிந்திருக்கக்கூடும்.அங்கவீனர்களாக இருப் பவர்கள் தாமாக விரும்பி அந்த நிலைக்குச் செல்வதில்லை. யுத்தத்தின் கோரப்பிடியில் சிக் கியுள்ள நாடுகளில் அங்கவீனர்களின் எண் ணிக்கை அதிகமாக காணப்படும். எமது நாட் டைப் பொறுத்த வரையில் அவ்வாறான சூழ் நிலை காணப்படுகிறது.

அங்கவீனர்கள் சமூகத்திலிருந்து விலக்கி வைக்கப்பட வேண்டியவர்கள் அல்ல இந்த சமூ கத்தில். வாழ்வதற்குரிய சகல உரிமைகளும் அவர்களுக்கும் உண்டு. அவர்களை காயப் படுத்தும் வகையில் எம் மத்தியில் பல வார்த் தைப் பிரயோகங்கள் காணப்படுகின்றன அவற்றைத் தவிர்த்து கொள்ள வேண்டும் எமது செயற்பாடுகளால் அவர்களது மனம் ஊனமாகக்கூடாது.

தம்மால் எதுவும் முடியாது என்ற தாழ்வு மனப்பான்மையை அவர்களுக்குள் வளர விடக்கூடாது. நாம் அவர்களுக்கு தைரியத் தையும் தன்னம்பிக்கையையும் அரவணைப் பையும் கொடுக்க வேண்டும். அவர்களை இந் தச் சமூகத்தில் சாதாரணமானவர்களைப போல தலைநிமிர்ந்து வாழவைக்க வேண்டும். நம ஒவ்வொருவருக்கும் இந்தக் கடப்பாடு உண்டு. விசேட வேலைக்குட்பட்டோரை காப்பது எம் சமூகத்தின் கடமையாகும்.

மீண்டும் வாழ்வோம் நிகழ்ச்சியில் உங்கள் கதை கள் பகுதிக்கு உங்கள் வாழ்க்கையில் இடம் பெற்ற சம்பவங்களை எழுதி அனுப்புங்கள் இவற்றை நாடக வடிவில் தொகுத்து உங்கள் கதைகளாக ஒலிபரப்பக் காத்திருக்கிறோம். உங்கள்கதைகள் மற்றவர்களுக்கு படிப்பினையாக அமையும் என்பதே மீண்டும் வாழ் வோம் நிகழ்ச்சியின் எதிர்பார்ப்பாகும்.



மீண்டும் வாழ்வோம் நிகழ்ச்சியானது சூரியன் எவ்.எம். வானொலியூடாக சனிக்கிழமை களில் காலை 6 மணிமுதல் 8 மணி வரையும் கிழக்கு மாகாணத்தில் பிறை எப்.எம். வானொலியூடாக (F.M. 102 Mhz) ஞாயிற்றுக்கிழமைகளில் பி.ப. 1.30 மணி முதல் 2 மணி வரையும் புத்தளப் பிரதேசத்தின் அநுரா் எப்.எம் ஊடாக ஞாயிற்றுக்கிழமைகளில் மாலை 6.45 முதல் 7.15 மணி வரையும் எமது நிகழ்ச்சி ஒலிப்பதிவுகளை (WWW.Internews. lk) என்ற இணையத்தளத்திலும் கேட்கலாம்.

இது ஒரு விளம்பரம்

# உச்ச ஸ்தான 1000 வங்கிகளுக்குள்

# லாவது இலங்கையின் வங்கி

, மூலதன நிறைவு போன்ற காரணங்களினால், உலக வங்கித்துறையில் முன்னிலையில் உள்ள 1000 தலைசிறந்த வங்கிகளுக்குள் கொமர்ஷல் ரப்படுத்தலுக்குள் சேர்ந்து கொண்ட முதலாவது இலங்கையின் வங்கியே கொமர்ஷல் வங்கி.

ன்றது. இத்தரப்படுத்தலை தேர்ந்தெடுத்து தொகுத்து வெளியிடுவது ஐக்கிய இராச்சியத்தின் முதற்தர நிதியியல் சஞ்சிகையான "த பாங்கர்".

இவ்விருது. எமது ஊழியர்களுக்கு பெருமையையும், உயர்ந்த தர வங்கியியல் தரத்தை பேணுவதற்கும் உந்துசக்தியையும் வழங்குகின்றது.

## பெற்றோர் சண்டையால் குழந்தைகளுக்கு மன அழுத்தம்

பெற்றோர்களிடையே நடக்கும் சண்டையால் குழந்தைகளுக்கு அதிக அளவில் மன அழுத்தம் ஏற்படும் என்று ஆய்வில் தெரியவந்துள்ளது.

பெற்றோரிடையே நடக்கும் சண்டை குழந்தைகளை எந்த அளவு பாதிக்கிறது என்பது குறித்து அமெரிக்காவைச் சேர்ந்த 3 பல்கலைக் கழகங்களின் ஆய்வாளர்கள் சமீபத்தில் ஆராய்ச்சி செய்தனர். 6 வயதுள்ள 208 குழந்தைகளிடம் இந்த ஆய்வு மேற்கோள்ளப்பட்டது. இந்த ஆய்வுக்கு உதவியாக அந்தக் குழந்தைகளின் தாயிடமும் கருத்து கேட்கப்பட்டது.

பெற்றோர்கள் போடும் சண்டையால் குழந்தைகளுக்கு அதிக அளவில் மன அழுததம ஏற்படுவது ஆய்வில் தெரிய வந்தது. மன அழுத்தத்துக்கு கார்டிசால் என்ற ஹோர்மோன் காரணமாக உள்ளது.

குழந்தைகளின் எச்சிலை சேகரித்து நடத்திய ஆய்வில் பெற்றோரிடையே நடக்கும் சண்டை காரணமாக குழந்தைகளுக்கு கார்டி சால் ஹோர்மோன் அதிக அளவில் சுரப்ப தும் அதனால் மன அழுத்தம் அதிகரிப்பதும் தெரிந்தது. (ஓ-6)

## பங்களாதேஷ் பிரதமராக ஷேக் ஹசீனா நாளை பதவியேற்பு

(டாகா)

பங்களாதேஷின் பிரதமராக ஷேக்



ஹசீனா நாளை பதவியேற்கஉள்ளார் பங்களாதேஷ் பொதுத் தேர்தலில் ஷேக் ஹசீனாவின் அவாமிலீக்கட்சி அதிக இடங்களில் வெற்றி பெற்று ஆட்சியைப் பிடித்துள்ளது. வாக்குப் பதிவின் போது பெருமளவு முறை கேடு நடந்துள்ளதால் தேர்தல் முடிவுகளை ஏற்க முடியாது என முன்னாள் பிரதமர் காலிதா ஜியா ஏற்கனவே தெரிவித்திருந்தார்.

இதனால் பங்களாதேஷ் அரசியலில் பரபரப்பு நிலவியது.

இந் நிலையில் காலிதா ஜியா கட்சியின் பொதுச் செயலர் கண்டேகர் தெல்வார் உசேன் கூறுகையில் ஷேக் ஹசீனாவின் அவாமி லீக் கட்சி ஆட்சி அமைப்பதை நாங்கள் தடுக்கமாட்டோம் தேர்தலின் போது மக்களுக்கு அளித்த வாக்குறுதிகளை அவர்கள் நிறைவேற்றுகின்றனரா என பொறுத்திருந்து பார்ப்போம் என்றார். (ஓ-6)

## பண்டைய மிகப் பெரிய தேவாலயம் சிரியாவில் கண்டு பிடிப்பு

சிரியாவில் மிகப் பெரிய பண்டைய தேவாலயமொன்று அகழ்வாராய்ச்சியாளர்களால் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

1500 ஆண்டுகளுக்கு முற்பட்டது என கருதப்படும் இந்த தேவாலயத்தின் எச்சங்கள் மத்திய சிரியாவிலுள்ள பல்மைரா எனும் இடத்தில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத் தக்கது.


இந்த தேவாலயமானது ஒரு சிறிய மண் டபம் கிறிஸ்தவ மத சடங்குகளுக்கான அறை கள் என்பவற்றையும் உள்ளடக்கியிருந்தது.

ரோம சகாப்த பிராந்தியமான பல்மைரா வடகிழக்கு டமஸ்கஸ் நகரிலிருந்து 220 கிலோ மீற்றர் தொலைவில் அமைந்துள்ளது.

கிறிஸ்துவுக்கு பின் 312 ஆம் ஆண்டு பல்மைராவில் கிறிஸ்தவ மதம் பரவியதையடுத்து அங்கு தேவாலயங்கள் நிர்மாணிக்கப்பட்டன.

இந் நிலையில் மேற்படி தேவாலயமானது இதுவரை சிரியாவில் கண்டுபிடிக்கப்பட்ட தேவாலயங்களிலேயே மிகவும் பெரியது என தெரிவிக்கப்படுகிறது.

இந்த தேவாலயமானது 24 மீற்றர் நீளமும் 12 மீற்றர் அகலமும் 6 மீற்றர் உயரம் உடையது என அகழ்வாராய்ச்சியாளர்




கள் கூறுகின்றனர். பல்மைமரா நகரின் அநேகமான பகுதிகள் கி.பி. 3ஆம் நூற்றாண்டில் ரோமானியர்களால் அழிக்கப்பட்டன. (ஓ-6)

## மும்பை தாக்குதல் ஆதாரங்களை வெளியிடுவதற்கு இந்தியா தயார்

(புதுடில்லி)

மும்பை தாக்குதலில் பாகிஸ்தானின் தொடர்பை உறுதிப்படுத்தும் ஆதாரங்களை இந்தியா வெளியிடவுள்ளது. மும்பை தாக்குதலில் பாகிஸ்தான் தங்கள் மீதான குற்றச்சாட்டை மறுத்து வரும் நிலையில் இந்தியா ஆதாரங்களை தொகுத்து வருகிறது.



இதில் பாகிஸ்தான் பயங்கரவாதிகளின் பங்கு அவர்களது திட்டம் ஆகியவை குறித்த ஆதாரங்கள் இருக்கும் தீவிரவாதிகள் பயன்படுத்திய படகிலிருந்து கிடைத்த ஆதாரங்கள் செய்மதி தொலைபேசி மூலம் நடந்த உரையாடல் பதிவு மற்றும் பிடிபட்ட பயங்கரவாதி அஜ்மல் அமிர் காசவின் ஒப்புதல் வாக்கு மூலமும் இதில் அடங்கும்.

இந்த ஆதாரங்களை பாகிஸ்தான் மற்றும் உலக நாடுகளிடம் இந்தியா காண்பிக்கவுள்ளது.

இதேவேளை சீன துணை வெளியுறவு அமைச்சர் ஹி யாபெய் இந்தியா பாகிஸ்தான் இடையே நிலவும் பதட்டம் தொடர்பாக விவாதிக்க இந்தியா வந்துள்ளார். யாபெய் ஏற்கனவே பாகிஸ்தான் சென்று அங்கு உயர் அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார்.

பயங்கரவாதிகள் மீது நடவடிக்கை எடுப்பது தொடர்பாக பாகிஸ்தானை சீனா வலியுறுத்தும் என எதிர்பார்க்கப்படுகிறது.

சீனவெளியுறவு அமைச்சர் யாங்ஜியாசி அடுத்தவாரம் இந்தியாவரவுள்ளார் அப்போது மும்பைத்தாக்குதல் தொடர்பான ஆதரங்களை இந்தியா தெரிவிக்கும். என கூறப்படுகிறார். (ஓ-6)

உலக தரிசனம்

## இந்தியாவிடம் ஒப்படைக்க வேண்டாம் பாகிஸ்தானுக்கு அமெரிக்கா புது யோசனை

(இஸ்லாமாபாத்)

மும்பை தாக்குதல் பயங்கரவாதிகளை இந்தியாவிடம் ஒப்படைப்பதற்கு பதிலாக தக்க முறையில் விசாரித்து நீங்களே உரிய தண்டனை வழங்குங்கள் என்று பாகிஸ்தானுக்கு புது யோசனை கூறியுள்ளது அமெரிக்க நிர்வாகம்.

அமெரிக்காவின் இந்த திடீர் மாற்றம் குறித்த செய்தி பத்திரிகைகளில் வெளியாகியுள்ளது.

மும்பை தாக்குதல் பயங்கரவாதிகளைக் கைது செய்து இந்தியாவிடம் ஒப்படைக்க வேண்டும் என்று பாகிஸ்தானை முன்னதாக வலியுறுத்தி வந்தது அமெரிக்கா.

பயங்கரவாதிகளை பாகிஸ்தான் ஒப்படைக்க வேண்டும் என்று இந்தியா விடுத்த கோரிக்கை நியாயமானதே .அதை பாகிஸ்தான் ஏற்கவேண்டும் என்று அமெரிக்கா வற்புறுத்தியது. ஆனால் யார் சொல்லியும் பாகிஸ்தான் மசியவில்லை.

பயங்கரவாதிகளை இந்தியாவிடம் ஒப்படைத்தால் அது வேறு பல பிரச்சினைகளுக்கு வழி வகுத்து விடுமோ என்கிற அச்சம் பாகிஸ்தான் ஆட்சியாளர்களுக்கு ஏற்பட்டுள்ளது.

அமெரிக்காவின் முயற்சிக்கு பலன் கிடைக்கவில்லை என்பதை வெளியுறவு அமைச்சர் பிரணாப் முகர்ஜி வியாழக்கிழமை தெரிவித்தார்.

குற்றவாளிகளை பரஸ்பரம் ஒப்படைத்துக்கொள்வதற்கு வகை செய்யும் உடன் பாடு எதுவும் இரு நாடுகளுக்கும் இடையே இல்லை.

எனவே பாகிஸ்தானில் உள்ள பயங்கரவாதிகளை இந்தியாவிடம் ஒப்படைத்தால் வேண்டாத விளைவுகள் ஏற்படக்கூடும். மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசுக்கு சிக்கல் வரலாம்.

அதனால் நாட்டின் அரசியல் ஸ்திரத்தன்மை குலைந்து போவதோடு தலிபான் மற்றும் அல்கொய்தா பயங்கரவாதிகளுக்கு எதிராக பாகிஸ்தான் அரசு நடத்தும் சண்டை தடைப்படக்கூடும் என்ற அமெரிக்காவிடம் [illegible] தரப்பு கருத்தை எடுத்துச் சொல்லியுள்ளது. பாகிஸ்தான் என்று பான் பத்திரிகை செய்தி தெரிவிக்கிறது.

இதனால் பாகிஸ்தானை மேலும் வற்புறுத்த விரும்பாமல் புது யோசனையை கூறியுள்ளது அமெரிக்கா.

இதேவேளை சுமார் 180 பேரை பலிகொண்ட மும்பை தாக்குதல் சம்பவத்தில் லஷ்கர் இ- தொய்பாவுக்கு தொடர்பு இருப்பதை உறுதி செய்யும் முக்கிய ஆதாரங்களை பாகிஸ்தானிடம் அமெரிக்காவின் உளவு அமைப்பினர் பகிர்ந்து கொண்டுள்ள தகவலை பிரணாப் முகர்ஜி வெளியிட்டுள்ளார்.

மும்பை தாக்குதலை நடத்த அடித்தளம் போட்டவர்கள் தாவூத் இப்ராஹிம் ஜெய்ஷ் இ முகமது தலைவர் மௌலானா மசூத் அசார் லக்வி ஆகியோர் இவர்களை இந்திய சட்டப்படி விசாரிக்க பாகிஸ்தான் ஒப்படைக்கவேண்டும் இதற்கென தனி உடன்பாட்டுக்கு அவசியம் இல்லை என்று பிரணாப் கூறியுள்ளார். (ஓ-6)


# இந்திரவிழா நடத்தி புகழ்பெற்ற வல்வெட்டித்துறை

## யுத்த அழிவை ஆற்றுப்படுத்தும் போற்றுதற்குரிய நகரசபை

**ஊர்த்தரிசனம்**

**கொற்றவை பி. கிருஷ்ணானந்தன்**
முகாமையாளர்
மக்கள் வங்கி, வல்வெட்டித்துறை.

உள்ளூராட்சி சபைகள் என்றாலே அக்காலத்தில் குட்டிப் பாராளுமன்றங்கள் தான். ஜனநாயக வழியில் மக்களால் தெரிவுசெய்யப்பட்ட அங்கத்தவர்களும், அவர்களால்



தெரிவு செய்யப்பட்ட தலைவருமாக மாநகர, நகர, பட்டின கிராம நிர்வாகங்களைக் கவனிக்கின்ற அதேவேளை வரியிறுப்பாளர்களின் பொதுத் தேவைகளை நிறைவேற்றுகின்றவர்களாகவும் செயற்பட்டனர். தற்போது நிலைமை மாறி ஆணையாள ரும், செயலாளர்களுமே சகல பொறுப்புக்களையும் ஏற்று நடத்த வேண் டிய கட்டாயம் யாவரும் அறிந்ததே.

யாழ். மாவட்டத்தில் மூன்று நகர சபைகளே இருக்கின்றன. இவற்றில் வல்வெட்டித்துறை நகராட்சி மன்றத்தின் செயற்திறன் பற்றிச் சிந்திப்பது பொருத்துடையது.

ஒரு காலத்தில் மொத்தத் தமிழினத்தின் கலாசார விழுமியங்களுக்கும், பண்பாட்டுக் கோலங்களுக்கும் எடுத்துக்காட்டாக வல்வெட்டித்துறை திகழ்ந்தது.

அப்பகுதி மக்கள் கல்வி கேள்விகளில் சிறந்து விளங்கி அரச இயந்திரத்தின் நிர்வாகங்களிலும் பெரும் பங்கு வகித்தனர். சோடாக் கம்பெனி, சவர்க்காரத் தொழிற்சாலை, நகைக் கடைகள், புடவைக் கடைகள் போன்றவற்றை ஊரிலும், யாழ். நகரிலும், (தென்னந்தோட்டங்களை பளை, முகமாலை, முல்லைத்தீவிலும் வைத்திருந்து செல்வச் செழிப்புக் குறைவின்றி வாழ்ந்திருந்தனர்.

இந்தியா, பர்மா போன்ற நாடுகளுடன் சுயமாகவே கடல்வாணிபம் செய்து பொருளீட்டி உச்ச நிலை யில் இருந்தனர். அன்னபூரணி என்னும் கப்பலைக்கட்டி அதை அமெரிக்கா வரை ஓட்டிச் சென்ற வரலாறு இவர் களது கடலோடும் திறமைக்குச் சான்றாகும். இலங்கை சுதந்திரம் பெற்றதும் இவர்களது கடல் வாணி பம் சட்டரீ தியற்றதாகியது.

ஆலயங்களினதும், வீடுகளி னதும் அமைப்புக்கள் நடையுடை பாவனைகள் யாவற்றிலுமே வல்வை நகரம் பெருமைக்குரியதாய் திகழ்ந்தது.

எங்குமே இல்லாத அளவுக்கு சன சமூக நிலையங்கள், விளையாட்டுக் கழகங்கள், தொகையிலும் செயலிலும் தம்மை இனங்காட்டி உயர்த் திக் கொண்டன. எல்லாவற்றுக்கும் உச்சமாக 'இந்திரவிழா' எனப் பேர் பெற்ற பெருந் திருவிழாவில் யாழ். குடாநாட்டிலிருந்து மட்டுமன்றி இலங்கையின் பலபாகங்களிலிருந் தும் பெருந்திரளாக மக்கள் வந்து கலந்து மகிழ்ந்து சென்றமை எளிதில் மறக்கமுடியாதவை.

இன்று யுத்தத்தின் அகோரத் தாண்டவத்தால் உருக்குலைந்து போனவற்றுள் முன்னிலையில் நிற்பதும் இவ் வல்வை நகரந்தான்.

எங்கும் உடைந்து விழுந்து போய்க்கிடக்கும் வீடுகள், கடைகள் ஆட்களற்று பற்றைகள் மூடியிருக்கும் வீடுகள், தரைமட்டமாகிப் போய்க் கிடக்கும் பொதுக்கட்டடங்கள், இவற்றை விட அன்னையையோ, தந்தையையோ, பிள்ளைகளையோ, சகோதரர்களையோ வன்செயலில் இழந்தவர்களாய்க் காணப்படும் வல்வை மாந்தர்கள் - இவைதான் இன்றைய வல்வை நகரம்.

வல்வெட்டித்துறை, வல்வெட்டி, கம்பர்மலை, ஊரிக்காடு, கெருடாவில், தொண்டமனாறு, பொலிகண்டி போன்ற கிராமங்களை உள்ளடக்கியதாய் இடம்பெயர்ந்து, புலம்பெயர்ந்து சென்றவர்கள் போக, மூன்றிலொன்றாய் குறைந்தது, இப் பிரதேசங்க ளுக்கு உயிரூட்டிக் கொண்டிருப் பவர்களை வரியிறுப்பாளர்களாய் கொண்டுள்ளது தான் வல்வை நகராட்சி மன்றம்.

வரியிறுப்பாளர்களிடமிருந்து பெருமளவு வருமானத்தைப் பெற்று வந்த சகல வாய்ப்புக்களையும், இழந்த நிலையில் தான் இன்றைய வல்வை நகராட்சி மன்றம். எனினும் அதன் செயலாளர் கு. அமிர்தலிங்கத்தின் அர்ப்பணிப்புடனான சேவை நொந்த உள்ளங்களுக்கு ஒத்தடம் கொடுக் கின்றதாக அமைவது ஆறுதல் தரு வதாகும்.

சுத்தம் பேணும் செயற்பாட்டில் வல்வை நகராட்சி மன்றம், மெச்சப்பட வேண்டியது. வீதிகளை அமைத்தல், சனசமூக நிலையங்கள், முன்பள்ளிகளுக்கு உதவுதல் முதலான வழமையான கடமைகளைச் செவ்வனே செய்து வரும் அதேவேளை நிரந்தரச் சந்தை இயங்கமுடியாத நிலையில் தற்காலிகச் சந்தையாயினும் அதைப் பெரியளவில் அமைத்துக் கொடுத்து மக்களின் தேவைகள் நிறைவேற்றப்படுகின்றமை பாராட்டப் பட வேண்டும்.

நூலகத்திற்கென நிரந்தரக் கட்டிடம் இல்லாவிடினும் தற்காலிக இடத்தில் சிறந்த நூலக சேவை வழங்கப்படுகின்றது.

தொண்டைமானாறு செல்வச்சந்நிதி ஆலய வருடாந்த உற்சவகாலத்தில் இந் நகராட்சி மன்ற ஊழியர்களின் கடமைக்கு மிஞ்சிய சேவை யாவராலும் பாராட்டப்பட்டு வருகின்ற ஒன்றாகும்.

இவ்வகையிலான, உள்ளூராட்சிச் சபைகளின் வழமையான செயற்பாடுகள் ஒவ்வொன்றிலும் உயர்ந்து நிற்கும் வல்வை நகராட்சி மன்றம் பற்றிய கட்டுரையை விரிவஞ்சி மேலும் விபரிக்காது, அண்மையில் நடாத்தப்பட்ட இரண்டு விழாக்கள் பற்றி மாத்திரம் சுருக்கமாகக் கூறி நிறைவு செய்வது பொருத்தமானது.

கடந்த 11.11.2008 வியாழக்கிழமை முன்பள்ளி ஆசிரியைகள் கௌரவிப்பையும் இளம்படைப்பாளிகள் கௌரவிப்பையும் பெரும் விழாவாக



கொண்டாடியதன் மூலம் வல்வை நகராட்சி மன்றம், எல்லோருடைய பாராட்டுக்களையும் சம்பாதித்துக் கொண்டது.

இதன் ஆட்சிக்குட்பட்ட எல்லைப் பரப்புக்குள் பணியாற்றுகின்ற இருபதுக்கு மேற்பட்ட முன்பள்ளி ஆசிரியைகள் தமக்குத் தரப்பட்ட சிறப்பான கௌரவத்தினால் மிக அக மகிழ்ந்து காணப்பட்டனர்.

குறைந்த வேதனத்துடன் சிறு குழந்தைகளுடன் மல்லுக்கட்டி அவர்களின் ஆளுமை வளர்ச்சியை ஆற்றுப்படுத்தும் முன்பள்ளி ஆசிரியைகளின் மகத்தான பணி பலராலும், விதந்துரைக்கப்பட்டு பரிசுகள் அளிக்கப்பட்டன.

அவ்வாசிரியைகளின் அறுவடையாக முன்பள்ளி மழலைச் செல்வங்களினால் வழங்கப்பட்ட நாட்டிய நிகழ்வுகள் மனதுக்கு ரம்மியாக இருந் தன.

இளம் இலக்கியப் படைப்பாளிகளாக முளைவிட்டுத் தம்மை இனங்காட்டியுள்ள ஆ.சுமன், சா.சாந்தி ஆகியோர் பாராட்டிக் கௌரவிக்கப்பட்டதன் மூலம் அவர்கள் மேலும் ஊக்கம் பெற்று இலக்கியப் பணி புரிய வாய்ப்பு வழங்கப்பட்ட தென லாம்.

கடந்த 21.11.2008 வெள்ளிக்கிழமை வல்வை நகராட்சி மன்றத்தால் நடாத்தப்பட்ட "உள்ளூராட்சி வாரம் - 2008" இறுதிப் பெரு விழா வில்

◆நகராட்சி மன்றத்தில் கடமையாற்றி அண்மையில் இளைப்பாறிய உத்தியோகத்தர்களைக் கௌரவித்தமை.

◆உள்ளூராட்சி வாரத்தில் மாணவர்களிடையே நடாத்தப்பட்ட போட்டிகளில் வெற்றியீட்டியவர்களுக்கும் முகாமைத்துவப் போட்டிகளில் வெற்றியீட்டிய சனசமூக நிலையங்களுக்கும் மென்பந்து, கரப்பந்து, கயிறு மூத்தல் போட்டிகளில் வெற்றியீட்டிய உள்ளூராட்சி மன்றங்களுக்கும் பரிசில் கள் வழங்கியமை.

◆வல்வை நகராட்சி மன்றத்தின் முன்னாள் தலைவர்களின் நிழற் படங்களைத் திரைநீக்கம் செய்தமை.

ஆகிய நிகழ்வுகள் மிகச் சிறப்பாக - பெருந்திரளான மக்கள் கூட்டத்தின் பிரசன்னத்துடன் நடாத்தப்பட்டன.

இறுதியில் மீண்டும் ஒருமுறை முன்பள்ளி மாணவர்களின் கலை நிகழ்வுகளைக் கண்டு களித்த மனநிறைவுடன் மக்கள் கலைந்து சென்றனர்.

தனது வழமையான கடமைகளூடாக மக்களின் திருப்தியை பெற்றுக் கொண்ட வல்லை நகராட்சி மன்றத்தின் செயலாளர் கு. அமிர்தலிங்கம் அவர்களையும், அதன் ஊழியர்களையும் இவ்விரண்டு விழாக்களின் சிறப்புக்களுக்காக எவ்வளவு பாராட்டினாலும் தகும்.

◆◆◆◆◆

**அன்பு வாசகர்களே !**

உங்கள் வலம்புரியில் மீண்டும் 'ஊர்த்தரிசனம்' தொடர் வெளிவரத் தொடங்கியுள்ளது.

உங்கள் ஊரின் பெருமைகளை அழகு தமிழில் எழுதி பொருத்தமான புகைப்படங்களுடன் அனுப்புங்கள். காலக் கிரமத்தில் அவை பிரசுரிக்கப் படும்.

(ஆ-ர்)

ஒருவன் கீழே விழுந்தால் இந்த உலகமே அவன் மீது ஓடத் தொடங்கும்.

– அமெரிக்கா

வலம்புரி

## ஒரு நாட்டுக்குள் வெற்றியும், தோல்வியுமா?

கிளிநொச்சியைக் கைப்பற்றியது தொடர்பில் நேற்று முன்தினம் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நாட்டு மக்களுக்கு உரையாற்றினார்.

அதே சமயம் படைத்தளபதிகள்,மந்திரிகள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் மத்தியிலும் அவர் உரையாற்றினார்.

அவர் ஆற்றிய உரையில் ஈடுஇணையற்ற வெற்றியென குறிப்பிட்டுள்ளார்.

கிளிநொச்சி கைப்பற்றிய செய்தியை அறிவிப்பதற்காக மேற்குறிப்பிடப்பட்டவர்கள் அவசர அவசரமாக ஒன்று கூடியதுபோல, வன்னியில் விமானத் தாக்குதல் மூலம் எறிகணை வீச்சு மூலம் உயிரிழந்த அப்பாவி மக்கள் தொடர்பில் இவ்வாறானதோர் கூட்டம் கூடியிருந்திருக்குமாயின்,அரசாட்சியின் அழகு பாரீர் என்று போற்றிக் கொள்ளலாம்.

ஆனால், கூட்டம் கூடியது கிளிநொச்சியை படையினர் மீட்டுவிட்டனர் என்பதைக் கொண்டாடுவதற்காக.

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டிலிருந்த கிளிநொச்சியை படையினர் மீட்டுவிட்டனர் என்பதற்காக தென்பகுதியில் வெடிகொளுத்தி மகிழ்ச்சி ஆரவாரம் செய்யப்படுகின்றது.

நாட்டில் யுத்தம் அப்பாவி உயிர்களைக் காவு கொண்டிருக்கும்போது வெடிகொளுத்தி ஆரவாரம் செய்வதில் ஏதேனும் அர்த்தமுண்டா? என்பது பற்றி ஒருகணம் சிந்திக்க வேண்டும்.

கிளிநொச்சியை மீட்பதற்காக படைத்தரப்பில் உயிரிழந்தவர்களின் உறவினர்கள் கண்ணீரில் கரைந்து கொண்டிருக்கும்போது வெடிகொளுத்திக் கொண்டாடுவோர் யாராக இருப்பார்கள் என்ற ஆய்வுநிலைப் பார்வையில் அவர்களே இனத்துவேசத்தின் சூத்திரதாரிகளாக, தமிழ் மக்களை இந்த நாட்டிலிருந்து அடியோடு அழிக்க வேண்டுமென்ற விருப்புடையவர்களாக இருப்பார்கள் என்ற உண்மையை உணர முடியும்.

கிளிநொச்சியைக் கைப்பற்றிய இராணுவம் தொடர்ந்தும் தனது படை நடவடிக்கையை முன்னெடுக்க வேண்டுமெனவும், யுத்த நிறுத்தம் செய்யக் கூடாதெனவும் ஜே.வி.பி கூறியுள்ளது.

அப்படியானால் இலங்கை இனப்பிரச்சினையை தீர்ப்பது எப்படி?

ஒரு நாடு; இரு இனங்கள்; இதற்குள் யுத்தம்; ஒரு இனத்தை இன்னொரு இனம் போரில் வென்றுவிட்டதென்ற பூரிப்பு இந்த அபத்தமான நிலை இருக்கும்வரை இலங்கை நாடு எந்த முன்னேற்றத்தையும் அடைய முடியாதென்பது தெளிவு.

வெற்றி கொண்டாடுவதாக இருந்தால் அது இலங்கை முழுவதும் கொண்டாடவேண்டும். இலங்கையைச் சேர்ந்தவர்கள் கொண்டாட வேண்டும். இதைவிடுத்து , தமிழர்களின் பூர்வீக இடங்களில் அரசு யுத்தம் நடத்துவதும், விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள பிரதேசங்களை கைப்பற்றி விட்டோம் என்ற புளங்காகிதம் கொள்வதும் பொருத்துடையதல்ல.

இன்றைய விஞ்ஞான தகவல் தொழில் நுட்பத்தின் மிக வேகமான வளர்ச்சியில் இலங்கையும் இரண்டறக் கலக்க வேண்டுமாயின் யுத்தத்தை நிறுத்தி சமாதானத்தை நிலை நிறுத்துவதே ஒரே வழியாக அமையும்.

# பிரிவினைவாதத்தை ஒழிக்க அரசுக்கு இரண்டு சவால்கள் உள்ளன

## ஜே.வி.பி.பொதுச் செயலாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

கிளிநொச்சி கைப்பற்றப்பட்டாலும் பிரிவனைவாதம் தொடர்பாக அரசாங்கத்துக்கு இரண்டு சவால்கள் காணப்படுவதாக ஜே.வி.பியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்துள்ளார்.

பிரிவினைவாதத்தை எவ்வாறு அரசியல் ரீதியாகக் கையாள்வது,எவ்வாறு இராணுவ ரீதியாக கையாள்வது என்ற இரண்டு சவால்கள் அரசாங்கத்துக்கு உள்ளது. இரண்டையும் சரியான முறையில் கையாண்டாலே பயங்கரவாதத்தையும்,பிரிவினை வாதத்தையும் முற்றாக இல்லாமல் செய்ய முடியும் என நேற்று சனிக்கிழமை கோட்டையில் நடை பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் ரில்வின் சில்வா கூறி னார்.


கிளிநொச்சியை இராணுவத்தினர் கைபற்றியிருப்பதானது பயங்கரவாதத்துக்கும், பிரிவினைவாதத்துக்கும் ஏற்பட்ட தோல்வியெனக் குறிப்பிட்ட அவர், அனைத்து இனங்களும் ஒற்றுமைப்படுத்தப்பட வேண்டும் எனத் தெரிவித்தார்.

கிளிநொச்சி வெற்றியைக் கொண்டாடுவது அவசியம். ஆயினும், அது ஏனைய சமூகத்தை குறிப்பாகத் தமிழர்களைப் பாதிக்கும் வகையில் அமைந்துவிடக்கூடாது. பொருளாதார நெருக்கடிகள் மற்றும் விலைவாசி அதிகரிப்பை தாங்கிக் கொண்டு போர் வெற்றிக்காக நாட்டு மக்கள் பல தியாக்ங்களைச் செய்துள்ளனர் என அவர் சுட்டிக்காட்டினார்.

கிளிநொச்சி வெற்றியைப் பயன்படுத்தி யாரும் அரசியல் இலாபம் தேட முயற்சிக்கக் கூடாது எனவும் வட பகுதியிலுள்ள மக்களும் ஏனைய பகுதி மக்களைப் போன்று சுதந்திரமாக வாழ்வதுடன்,அவர்களின் ஜனநாயக உரிமைகளை நிறைவேற்றுவதற்கு அரசாங்கமே நடவடிக்கை எடுக்கவேண்டும் எனவும் அவர் கூறியுள்ளார். (ஓ-6)

# கலாபூஷணம் விருது பெற்ற எழுத்தாளர் சண்முகநாதன்

**முழுப்பெயர்:** பொன்னையா சண்முகநாதன், பிறந்த திகதி 02.02.1939, **விலாசம் :** டாக்டர் சுப்பிரமணியம் வீதி, கந்தரோடை,சுன்னாகம், **மாவட்டம்:** யாழ்ப்பாணம், **துறை:** இலக்கியம்.



யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர் இலங்கையின் தமிழ் எழுத்தாளர்களுள் ஒருவராவார். ஆரம்ப காலத்தில் தனியார் நிறுவனமொன்றில் எழுதுவினைஞராகப் பணிபுரிந்ததுடன் பல ஆக்கங்களையும் எழுதி வந்தார். 1961 ஆம் ஆண்டிலிருந்து எழுத்துத்துறையில் பெரிதும் ஈடுபட்டுப் பல பத்திரிகைகளிலும் சஞ்சிகைகளிலும் கட்டுரைகள் எழுதினார். அவற்றில் இவர் எழுதிய நகைச் சுவைக் கட்டுரைகள் தனித்துவம் வாய்ந்தவை.

இவர் எழுதியவற்றில் கொழும்புப் பெண், பெண்ணே நீ பெரியவள் தான் என்னும் நகைச் சுவைக் கட்டுரைகளும் வெள்ளி வண்டி என்ற சிறுகதையும் இதோ ஒரு நாடகம் என்ற குறுநாடகமும் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கனவாகும்.

மேலும் 'சன் அங்கிள்' என்ற புனைப்பெயரில் எழுதிய 'நினைக்க, சிரிக்க,சிந்திக்க' , 'சிரிப்போம் சிந்திப்போம்' என்பன நூலக தொகுக்கப்பட்டுள்ளது.

இவரின் நகைச்சுவை இலக்கிய முன்னோடிகள் என்ற நூலும் சிறப்பானதொன்றாகும்.



*கலாசார திணைக்களம் ஏற்பாடு செய்த கலா பூஷணம் விருது வழங்கும் நிகழ்வு கொழும்பு ஜோன் டி.சில்வா கலையரங்கில் நடைபெற்ற போது கலாசார அலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் ஈ.எம். அபயரத்தினாவினால் மூத்த எழுத்தாளர் பொ.சண்முகநாதன் விருது வழங்கிக் கௌரவிக்கப்படுகிறார்.*

2004இல் இலங்கைப் பத்திரிகை ஸ்தாபனம் இவரது ஆக்கங்களுக்காக சிறந்த தமிழ் பத்திரிகை எழுத்தாளருக்கான தேசிய விருது அளித்துப் பாராட்டியுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். (ந-5)


# குடும்பம் ஒரு கோவில்

குடும்பம் என்பது சமூகத்தின் அடித்தளம். ஒரு கட்டடத்தின் உறுதிக்கு எவ்வாறு அடித்தளம் முக்கியமோ அது போல ஒரு சமூகத்தின் வளர்ச்சிக்கும் உறுதிக்கும் குடும்பம் முக்கியம் அடித்தளம் ஆட்டம் கண்டால் கட்டடம் இடிந்து விடும். குடும்ப வாழ்வு ஆட்டம் கண்டால் சமூக வாழ்வு ஆட்டம் கண்டு விடும். எனவே சமூகத்தின் மேன்மைக்கு குடும்ப வாழ்வு சீராக அமைய வேண்டும்.

## பரமபிதா காட்டிய பாதை

இந்த குடும்பத்தைப் பற்றி சொல்கின்ற போது குடும்பம் ஒரு பல்கலைக்கழகம் என்று பார்க்கின்றோம். காரணம் ஒரு பல்கலைக்கழகத்தில் ஒருவன் நுழைந்து விட்டால் அவன் அனைத்து துறைகளிலும் சிறந்து விளங்கி பல கலைகளையும் கற்றுத் தேர்ந்து அறிவாளியாக டாக்டராக (முனைவர்) வெளியே வருகின்றான். அதுபோல குடும்பத்தில் தான் ஒருவன் முதன் முதலாக அப்பா, அம்மா ,அண்ணன், தம்பி என்ற உறவு நிலைகளிலிருந்து அனைத்து நல்ல செயல்கள், குணங்கள், பழக்க வழங்கங்களையும் கற்று சமூகத்திற்கு வருகின்றான். இந்தக் குடும்பம் என்னும் பல்கலைக் கழகத்தில் பெற்றோர்கள் தான் ஆசான்கள் பிள்ளைகள் தான் மாணவர்கள் பெற்றோர்கள் எவ்வாறு கற்றுக்கொடுக்கின்றார்களோ அவ்வாறுதான் பிள்ளைகளும் கற்றுக்கொண்டு உருவாவார்கள். இதற்கு பெற்றோர்களின் தியாகமும் முன் மாதிரியும் பிள்ளைகளின் கீழ்ப்படிதலும் பொறுப்பும் மிக மிக அவசியம்.

ஒரு குடும்பம் எப்போது முன்னேறும் என்றால் கூடி வாழும் குடும்பம் கோடி நன்மை பெறும் என்பதே விடையாகும்.



எனவே குடும்ப உறுப்பினர்கள் உறவினர்கள் ஒன்று கூடி ஒற்றுமையாக வாழ்கின்ற போது அக்குடும்பம் எல்லா நன்மைகளும் ஒரு சேரப் பெறும் இதை விடச் சற்று மேலாகச் சொல்லுகின்ற போது,

குடும்பம் ஒரு கோவில் ஒவ்வொரு குடும்பமும் ஒரு கோவிலாகச் செயல் படுகின்றபோது அங்கு உண்மையில் தெய்வம் உறைகின்றார். அக்குடும்பம் தெய்வம் உறையும் இல்லமாகும். கோவிலுக்கு வருகின்றவர்கள் இறை பிரசன்னத்தை உணர்ந்து தங்கள் மனக் குறைகளைச் சொல்லி எவ்வாறு ஆறுதல் பெற்றுச் செல்கின்றார்களோ அது போல ஒவ்வொரு குடும்பமும் பிறருக்கு இறை பிரசன்னத்தை உணர்த்துகின்ற, பிறர் குறைகளைப் போக்கி ஆறுதல் அளிக்கின்ற ஒன்றாக அமைய வேண்டும்.

மேற்சொன்ன அனைத்து குணங்களையும் ஒரு குடும்பம் பெற்றிருந்தால் அதுவே திருக்குடும்பமாகும்.

இன்றைய திருக்குடும்ப விழா இதைத்தன் நமக்கு ஆழமாக, அழுத்தமாகச் சொல்கின்றது. **ஜோன் ரொபேர்ட்**

திரை விமர்சனம்



# சிலம்பாட்டம்



அப்பாவை வில்லன் கொன்ற விஷயத்தை ஃக்ளை மாக்ஸில் பழிவாங்குகிற கதை. நிச்சயம் புதுசு இல்லை. பல பழைய படங்களை நினைவுபடுத்தி எடுத்திருக் கிறார்கள். கிராமத்தில் சிலம்பை சுழற்றுகிற அப்பா, கோயிலில் அர்ச்சனை பண்ணும் மகன் என சிம்புவுக்கு இரட்டை வேடங்கள். இரண்டிலுமே அவர் இளமைத் துள்ளலுடன் வெளுத்து வாங்கியிருக்கிறார். ஆனால் ஒவ்வொரு பாடல் காட்சி முடிந்த பிறகும் சிம்பு தனி ஆட்டம் போடுவது அடிவயிற்றை கலக்குகிறது.



போதாக்குறைக்கு விரல் வித்தை வேறு.

அக்கிரகாரத்து அடங்காப் பெண்ணாக ஷனாகான் ஸ்லிம் அண்ட் ஸ்வீட் கூடிய விரைவில் நடிக்கக் கற்றுக்கொள்வார்என்றுநம்புவோம்.படத்தில்தூக்கிநிற்பது இரட்டை அர்த்தமும் ஆபாசமும் இவருடன் கூட் டணி போட்டு, சந்தானம் எடுத்துவிடும் வசனங்களில் வரலாறு காணாத விரசம்.

கொலை வழக்கிலிருந்து சிம்புவைக் காப்பாற்றுவதற்காக கோர்ட்டில் சிநேகா சாட்சி சொல்லும் காட்சி மனதைத் தொடுகிறது. சிம்புவின் அண்ணனாக பிரபு. ஊர்ப் பெரியவராக வந்து கோபத்துடன் சில முறை கமராவை திரும்பிப் பார்ப்பதோடு இளைய திலகத்துக்கு வேலை முடிந்தது.கருணாஸின் அமைதியான காமெடியை ரசிக்கலாம். சிம்புவுக்காகவே யுவன் றொம்ப மினக்கெட்டு யூத்ஃபுல் ட்யூன் களைப் போட்டு அசத்தியிருக்கிறார். கூவேர் இஸ் தி பார்ட்டியில் தியேட்டரே பார்ட்டி கொண்டாடுகிறது. இயக்குநராக வலம் வந்திருக்கும் கமரா மேன் சரவணன் தகுதியான கதையை தேர்ந்தெடுத்திருக்கலாம்.

## சினேகாவின் மார்க்கெட்டை குறிவைக்கும் ஹரி



நடிகை சினேகா தற்போது பிஸியான நடிகையாகி வருவது தெரிந்த சங்கதிதான் தமிழ் ரசிகர்கள் மத்தியில் சினேகாவின் மார்க்கெட் சூடு பிடித்து வருவதால் தெலுங்கில் வெளியாகி மெகா ஹிட் ஆன தொலி வளர்ப்பு என்ற படத்தை தமிழில் வெளியிடவிருக் கிறார்கள். ஹரி எனும் பெயரில் தயாராகி வரும் இப்படத்தை முத்தையா சுப்பையா இயக்கவுள்ளார். ஹரி படத்தின் கதை காதலுக்கும் கண்ணியத்துக்கும் நடக்கும் போராட்டம் என விளம்பரப்படுத்தப்படுகிறது.அப்படி என்ன கதை என்று விசாரித்தால், வழக்கமான திகில் ப்ளஸ் த்ரில் கதைதான். ஆனால் கொஞ்சம் வித்தியாசமாக சொல்லியிருக்கிறார்களாம்.

தெலுங்கிலும் நான் கடவுள்

டைரக்டர் பாலா இயக்கத்தில் ஆர்யா நடிக்கும் நான் கடவுள் படம் தமிழில் ரிலீஸ் ஆகும் அதே நாளில் தெலுங்கிலும் ரிலீஸ் ஆகவுள்ளதாம். இந்தப் படத்தின் தெலுங்கு வெற்றியைக் குறிவைத்து தமிழில் ஏற்கனவே ஆர்யா -பூஜா நடித்து வெளிவந்த ஓரம்போ படம் தெலுங்கில் ஹலோ ஆட்டோ எனும் பெயரில் தயாராகி உள்ளது. ஆனால் நான் கடவுள் தெலுங்கில் வெளிவந்து, அங்கு ஆர்யாவின் மார்க்கெட் சூடு பிடித்த பின்பே இந்தப் படத்தை ரிலீஸ். செய்ய முடிவு செய்திருக்கிறார்களாம். தமிழில் ஆர்யா நடித்த நான் கடவுள் படத்துக்கே ரிலீஸ் திகதி தெரியவில்லை. இதில் தெலுங்கு ரிலீஸ் எப்போது என்பது யாருக்கு தெரியும்? எல்லாம் அந்தக் கடவுளுக்கே வெளிச்சம்!

## துபாய் ராணி நயன்தாரா



நடிகை நயன்தாரா பில்லா படத்திற்கு முன்பு தெலுங்கில்தான் படுகவர்ச்சியாக நடித்து வந்தார். தற்போது நயனுக்கு தமிழில் நம்பர் வன் இடம் கிடைத்திருப்பதால் அவர் தெலுங்கில் செமகிளாமராக நடித்த இரண்டு படங்களை தமிழில் வெளியிட திட்டமிட்டுள் ளனர். அதில் ஒன்று துபாய் சீனு. இந்தப் படத்தை தமிழில் துபாய் ராணி என்ற பெயர் மாற்றத்துடன் வெளியிடவிருக்கிறார் கள். படத்தில் நயன்தாராவின் ஜோடியாக நடித்திருப்பவர் ரவி தேஜா. நயன்தாராவின் கவர்ச்சியையே பிரதானமாக வைத்து எடுக்கப்பட்டிருக்கும் இப்படம் தமிழ் ரசிகர்களுக்கு நல்ல தீனியாக இருக்கும் என்கிறார் துபாய் ராணி படக்குழுவினர்.அதேபோல் நயன் தாராவின் படுகவர்ச்சி நடிப்பில் வெளியாகி தெலுங்கில் சக்கை போடு போட்ட யோகி படமும் தமிழில் முரட்டுத்தம்பி என்ற பெயரில் வெளியாகவிருக்கிறது.

## ஆண் வேடத்தில் பூமிகா!



'சமுத்திரா' சில்வர் ஸ்கிரீன்ஸ் வழங்க 'சத்யதுர்கா தன்மய ஸ்ரீ மூவிஸ்' பட நிறுவனம் சார்பில் மோகன் குமார் ஜி. பிரமாண்டமாகத் தயாரிக்கும் படம் 'மல்லிகை' இப்படத்தின் கதை, திரைக் கதை, வசனம் எழுதி இயக்குகிறவர்வி.சமுத்திரம்.

இந்தப் படத்தில் முரளி கிருஷ்ணன் கதாநாயகனாக நடிக்க, அவருக்கு ஜோடியாக பூமிகா நடிக்கிறார். 'ஜில்லு ன்னு ஒரு காதல்' படத்திற்கு பிறகு பூமிகா நடிக்கும் படம் இது. இந்தப் படத்தில் பல காட்சிகளில் பூமிகா ஆண் வேடத்தில் வருவார் என்பது குறிப்பிடத்தக்கது.

சரத்துமார் நடிக்கும் '1977' படத்தில் நாயகியா நடித்து வரும் பர்ஸானா இப்படத்தில் இரண்டாவது கதாநாயகியாக நடிக்கிறார். இவர்களுடன் கோவை சரளா, சுமன்ஷெட்டி, காதல் சுகுமார், அபிநயஸ்ரீ, அனுராதா ஆகியோரும் நடிக் கிறார்கள்.இவர்களுடன் வில்லனாக பிரபல ஹிந்திப்பட நடிகர் மகேஷ் நடிக்கிறார்.

காதல் மற்றும் அதிரடி ஆக்ஷன் படமாக உருவாகி யுள்ளஇப்படம் விரைவில் திரைக்கு வரவிருக்கிறது.

## அனுஷ்கா காட்டில் மழை



இரண்டு படத்தில் மாதவனுக்கு ஜோடியாக நடித்த நாயகிகளில் ஒருவராக வந்தவர் நடிகை அனுஷ் கா.

நல்ல அழகு இருந் தும், கவர்ச்சியாக நடிக்க தயாராக இருந்தும் தமி ழில் எதிர்பார்த்த அளவுக்கு வாய்ப்புகள் கிடைக் காததால் தாய்மொழியான தெலுங்கு பக்கமே கரையொதுங்கினார். இந்நிலையில் தற்போது விஜய்யுடன் வேட்டைக் காரன்,பருத்திவீரன் கார்த்தியுடன் சிறுத்தை என 2 படங் களில் ஒப்பந்தமாகியிருக்கிறார் அனுஷ்கா.

மேலும் 2 படங்களில் நடிக்க பேச்சுவார்த்தை நடந்து வருகிறதாம். இதுபற்றி அனுஷ்கா கூறுகையில், தெலுங் கில் நான் நம்பர் வன் நடிகையாக இருந்தாலும் தமிழ் படங்களில் நடித்து நம்பர் வன் இடத்தைப் பிடிப்பதையே



இலட்சியமாக வைத்திருக் கிறேன். என் இலட்சியம் நிச்சயம் நிறைவேறும் என்றார்.

## ஒரே நேரத்தில் 2 படங்களை இயக்கி நடிக்கும் ஜெய்ஆகாஷ்

ரோஜாவனம் படத்தில் அறிமுகமாகி , காதல் இனிது இராமகிருஷ்ணா, குருதேவா உள்ளிட்ட 10 தமிழ் படங்க ளிலும் , 23 தெலுங்குபடங்களிலும் , கன்னடத்தில் 2 படங் களிலும் ஹுரோவாக நடித்திருப்பவர் ஜெய் ஆகாஷ் தற் போது இவர் ஒரே நேரத்தில் 2 படங்களை இயக்கி நடித்து வருகிறார்.

இவர் இயக்கத்தில் ஒரு படத்திற்கு 'மதன்' என்றும் மற்றொரு படத்திற்கு 'காதலன் காதலி' என்றும் பெயர் சூட்டப்பட்டு சூட்டிங் நடந்து வருகிறது. இதில் மதன் படத்தில் நடிக்க முதலில் நடிகை தமன்னா ஒப்பந்தமா னார். பின்னர் அவர் விலகிக்கொண்டார். அவருக்கு பதிலாக நடிகைசுனைனாஒப்பந்தம் செய்யப்பட்டார்.தற்போது அவரும் ஜெய் ஆகாஷுடன் நடிக்க மறுத்து வருகிறார். ஆனால் சுனைனாவுடன்சேர்ந்து எடுக்கப்பட்டஸ்டில்கள்தான் இப்போது மதன் படத்தின் பப்ளிசிட்டி ஸ்டில்களாகப் பயன்படுத் தப்பட்டு வருகின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

## சினி துளிகள்

◆இயக்குநர் ஷங்கரைத் தொடர்ந்து இயக்குநர் பேரரசுவும் 'மேஜிக் மைண்ட்' என்ற படத் தயாரிப்பு நிறுவனத்தை தொடங்கியிருக்கிறார். இதன்மூலம் புதுமுக் இயக்குநர்களுக்கு வாய்ப்பளிக்கப் போகிறாராம்.

◆'வில்லு' விற்குப் பின் விஜய் நடிக்கும் 'வேட்டைக் காரன்' படத்தில் அவருக்கு ஜோடியாக நடிக்க அனுஷ்கா ஒப்பந்தம் செய்யப்பட்டிருக்கிறார்.படத்தை பாபு சிவன் இயக்குகிறார். ஏ.வி.எம்.பாலசுப்ரமணியன் தயாரிக்கிறார்.

◆நடிகரும்,தயாரிப்பாளருமான பாலாஜி, நீண்ட இடைவெளிக்குப் பின் படத் தயாரிப்பில் இறங்கியிருக்கிறார். நாற்பது ஆண்டுகளுக்கு முன் வெளியான 'என் தம்பி' என்ற படத்தை சிற்சில மாற்றங்களுடன் மீண்டும் ரீமேக் செய்கிறார். இந்தப் படத்தில் பழம் பெரும் நடிகை சரோஜா தேவி முக்கிய கதாபாத்திரத்தில் நடிக்க சம்மதித்திருக்கிறார்.


படத்தில் பரத், ப்ரியாமணி

◆ கூல் புரொடக்ஷன்ஸ் தயாரிக்கும் புதிய திரைப் படம் 'ஆறுமுகம்' இந்தப் படத்தில் பரத் நாயகனாக நடிக்க, அவருக்கு பிரியா மணி ஜோடியாக நடிக்கிறார். இப்படத்திற்கு கதை,திரைக் கதை,வசனம் எழுதி இயக்கு கிறார் சுரேஷ் கிருஷ்ணா. இவர் ரஜினி நடித்த பாட்சா படத்தை இயக்கியவர் என் பது குறிப்பிடத்தக்கது. சிறிய இடைவெளிக்குப் பின்னர் இவர் இயக்கும் படம் இது. இப்படத்திற்காக அண்மையில் ஐந்து கோடி ரூபா மதிப்பில் உருவாக்கப்பட்ட பிரமாண்டமான அரங்குகளில் மூன்று பாடல் காட்சிகள் படமாக்கப்பட்டது.


படத்தில் தமன்னா, கார்த்திக்

◆திருப்பதி பிரதர்ஸ் என்ற பட நிறுவனம் தயாரிக்கும் புதிய திரைப்படம் 'பையா' இந்தப் படத்தில் 'பருத் திவீரன்' கார்த்தி, தமன் னா ஆகியோர் நாயகன், நாயகியாக நடிக் கிறார்கள். 'பச்சைக் கிளி முத்துச்சரம்' படத்தில் நடித்த மிலிந்த் சோமன் முக்கிய கதாபாத்திரத்தில் நடிக்கிறார்கள். இப்படத்திற்கு கதை, திரைக்கதை, வசனம் எழுதி இயக்குகிறார். என். லிங்குசாமி, யுவன் சங்கர் ராஜா இசையமைக்க, மதி ஒளிப்பதிவு செய்கிறார்.


இப்படத்திற்கான முதற்கட்டப் படப்பிடிப்பு பெங்களூரில் தொடங்கியது. ஒரு இளைஞனும், அவனது காதலியும் தங்களது வாழ்க்கைப் பாதையில் எதிர்கொள்ளும் சந்திப்புகள் மற்றும் சம்பவங்களின் இனிய பயணமே இந்தப் படத்தின் கதை.

'ஹேப்பி டேஸ்' என்ற தெலுங்கு படத்தில் நாயகியாய் நடித்த சோனியா தீப்தியும் இந்த படத்தில் ஒருமுக்கியமான கதாபாத்திரத்தில் நடிக்கிறார். இதற்குள் நடைபெறும் சுவாரஸ்யமான சம்பவங்கள் தான்திரைக்கதை.

ஆக்ஷன் காட்சிகளும் உண்டு. காதல், சென்டிமெண்ட்ஸ், காமெடி உள்ளிட்ட சனரஞ்ச கமான அம்சங்களும் உண்டு கார்த்தியை வித்தியாசமான கோணத்தில் பயன்படுத்தத் திட்டமிட்டிருக்கிறார்கள். இறுதிக் கட்டக் காட்சியை கொல்கத்தா நெடுஞ்சாலையில் படமாக்கவுள்ளனர்.

# விஸ்வரூபமெடுத்தார் திலகரட்ன டில்சான்; சரிவிலிருந்து மீண்டது இலங்கை அணி

## கபுகெதர; வர்ணபுர அரைச்சதம்



(சிற்றக்கொங்)

திலகரட்ன-டில்சானின் சிறப்பான சதத்தின் மூலம் இலங்கை அணி நேற்றைய முதல்நாள் ஆட்டநேர முடிபில் 6 விக்கெட்டுக்களையிழந்து 371 ஓட்டங்களை எடுத்திருந்தது.

பங்களாதேஷிற்கு சுற்றுப்பயண மேற்கொண்டுள்ள இலங்கை அணி 2 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடுகின்றது.

இதில் முதலாவது டெஸ்டில் இலங்கை அணி வெற்றிபெற்று தொடரில் 1:0 என்ற கணக்கில் முன்னிலையிலுள்ள நிலைய்யில் தீர்க்கமான இரண்டாவதும் இறுதியுமான டெஸ்ட் நேற்று சிற்றக்கொங்கில் ஆரம்பமானது.

இப்போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணிக்கு ஆரம்பமே அதிர்ச்சியளித்னதது.

அணி ஒரு ஓட்டத்தை மாத்திரமெடுத்த நிலையில் ஆரம்பத்துடுப்பாட்ட வீரராக களமிறங்கிய பிரசன்ன ஜெயவர்த்தன ஓட்டமெதனையும் எடுக்காமல் மோர்ட்டாஷா வின் பந்து வீச்சில் எல்.பி.டபிள்யூ முறையில் ஆட்டமிழந்தார்.

அடுத்து களமிறங்கிய குமார் சங்கக்காரவும் 5 ஓட்டங்களை மாத்திரமெடுத்து மோர்ட்டாஷாவின் பந்துவீச்சில் நேரடியாக போல்ட் செய்யப்பட்டு ஆட்டமிழக்க இலங்கை அணி 7 ஓட்டங்களை மாத்திரமெடுத்து 2 விக்கெட்டுக்களையிழந்தது. இந்நிலையில் களமிறங்கிய அணித்தலைவர் மஹேல ஜெயவர்த்தனா நிதானமாக துடுப்பெடுத்தாடினார்.

எனினும் தனது 100ஆவது டெஸ்டில் விளையாடிய மஹேல ஜெயவர்த்தனாவும் 11 ஓட்டங்களை எடுத்த போது ஹசனின் பந்து வீச்சில் விக்கெட் காப்பாளர் ரகீமிடம் பிடிகொடுத்து ஆட்டமிழக்க இலங்கை அணி 39 ஓட்டங்களை மாத்திரமெடுத்து 3 விக்கெட்டுக்களையிழந்து தடுமாறியது.

இந்நிலையில் தொடர்ந்து களமிறங்கிய சமரவீர பொறுப்புடன் துடுப்பெடுத்தாட மறு முனையில் வர்ணபுர சிறப்பாகத் துடுப்பெடுத்தாடி ஓட்டங்களைக் குவித்தார்.

எனினும் இலங்கை அணி 75 ஓட்டங்களை எடுத்தபோது சமரவீர 19 ஓட்டங்களுடன் ஹுசைனின் பந்துவீச்சில் நேரடியாக போல்ட்



செய்யப்பட்டு ஆட்டமிழந்தார்.

இந்நிலையில் வர்ணபுரவுடன் ஜோடி சேர்ந்த திலகரட்ன டில்சான் அதிரடியாகத் துடுப்பெடுத்தாடி ஓட்டங்களைக் குவிக்க இலங்கை அணி 100 ஓட்டங்களை கடந்தது.

இந்த ஜோடியின் சிறப்பான இணைப் பாட்டத்தின் மூலம் இலங்கை அணி சரிவிலிருந்து மீண்டது.

இதில் அதிரடியாகத் துடுப்பெடுத்தாடிய டில்சான் 37 பந்துகளில் தனது அரைச்சதத்தை பூர்த்தி செய்து அசத்த இலங்கை அணி 150 ஓட்டங்களைக் கடந்தது.

மறுமுனையில் ஆரம்பத்துடுப்பாட்ட வீரர் வர்ணபுரவும் தனது அரைச்சதத்தை கட ார். எனினும் இந்த ஜோடி 5ஆவது விக்கெ ட்டுக் காக 119 ஓட்டங்களை எடுத்தபோது ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் வர்ணபுர 63 ஓட்டங்களுட ன் ஆட்டமிழந்தார்.

தொடர்ந்து 6ஆவது விக்கெட்டுக்காக டில் சானுடன் ஜோடி சேர்ந்த கப்புகெதரவும் நிதா னமாகத் துடுப்பெடுத்தாடினார்.

இதில் அதிரடியாகத் துடுப்பெடுத்தாடிய திலகரட்ண டில்சான் 93ஆவது பந்தில் தனது 6ஆவது சதத்தை பூர்த்தி செய்ததுடன் ஆண்டின் முதலாவது சதத்தையும் பதிவு செய்தார்.

இந்த ஜோடியின் சிறப்பான இணைப்பாட்டத்தின் மூலம் இலங்கை அணி 250 ஓட்டங்களை எடுத்து வலுவான நிலையை அடைந்தது.

இதில் கபுகெதர 64ஆவது பந்தில் அரைச் சதத்தை பூர்த்தி செய்தார். இந்த ஜோடியைப் பிரிக்க பங்களாதேஷ் அணி பல வியூகங்களை வகுத்த போதும் பலனளிக்காமல் போக அதிரடியாகத் துடுப்பெடுத்தாடிய திலகரட்ன டில்சான் 146ஆவது பந்தில் 150 ஓட்டங்களைக் கடக்க இலங்கை அணி 350 ஓட்டங்களைக் கடந்தது.

எனினும் இந்த ஜோடி 173 ஓட்டங்களை எடுத்த போது அதிரடியாகத் துடுப்பெடுத்தாடிய திலகரட்ன டில்சான் 165 பந்துகளில் (21 பவுண்டரிகள்,2 சிக்ஸர்கள் உட்பட) 162 ஓட்டங்களை எடுத்தபோது இனாமுல் ஹக் ஜீன்ரின் பந்து வீச்சில் நேரடியாக போல்ட் செய்யப்பட்டு ஆட்டமிழந்தார்.

அடுத்து சமிந்த வாஸ் களமிறங்கி நிதானமாகத் துடுப்பெடுத்தாட இலங்கை அணி நேற்றைய முதல் நாள் ஆட்ட நேர முடிபில் 6 விக்கெட்டுக்களையிழந்து 371 ஓட்டங்களை எடுத்திருந்தது.

இதில் கபுகெதர 93 ஓட்டங்களுடனும் வாஸ் ஒரு ஓட்டத்துடனும் ஆட்டமிழக்காமல் களத்திலிருந்தனர்.

பந்து வீச்சில் மோர்ட்டாஷா 2 விக்கெட்டுக்களும் ஹுசைன்,ஹசன்,ஹக் ஜீன்ர், அணித் தலைவர் அஷ்ரபுல் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர். இரண்டாம் நாள் ஆட்டம் இன்றாகும்.

## ஆஸி. அணி நிதானம்



கிளார்க்கின் அரைச்சதத்தின் மூலம் மூன்றாவது டெஸ்டின் முதல் நாள் ஆட்ட நேர முடிபில் அவுஸ்திரேலிய அணி அதன் முதலாவது இன்னிங்ஸில் 6 விக்கெட்டுக்களையிழந்து 267 ஓட்டங்களை எடுத்திருந்தது.

அவுஸ்திரேலியாவுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள தென்னாபிரிக்க அணி 3 டெஸ்ட்,2 இருபது-20 மற்றும் 5 ஒருநாள் போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடுகின்றது.

இதில் முதல் இரண்டு டெஸ்ட் போட்டிகளில் வெற்றிபெற்று தென்னாபிரிக்க அணி தொடரை 2:0 என்ற கணக்கில் தனதாக்கிய நிலையில் மூன்றாவதும் இறுதியுமான டெஸ்ட் நேற்று சிட்னியில் ஆரம்பமானது.

இப்போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலிய அணி நேற்றைய முதல் நாள் ஆட்டநேர முடிபில் அதன் முதலாவது இன்னிங்ஸில் 6 விக்கெட்டுக்களையிழந்து 267 ஓட்டங்களை எடுத்திருந்தது.

இதில் மைக்கெல் கிளார்க் 73 ஓட்டங்களுடனும் ஜோன்ஸன் 17 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காமல் களத்திலிருந்தனர்.

முன்னதாக ஹட்ரிச் 47,ஹடின் 38, ஹைடன் 31, மற்றும் ஹசி 30 ஓட்டங்களுடனும் அணித்தலைவர் பொன்டிங் ஓட்டமெதனையும் எடுக்காமலும் ஆட்டமிழந்தனர்.

பந்துவீச்சில் ஸ்ரையன் 2 விக்கெட்டுக்களையும் நிற்னி,மோர்கல், ஹலிஸ் மற்றும் ஹரிஸ் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

## மேற்கிந்தியதீவுகள் வெற்றி

(கிறிஸ்ற் சேர்ஜ்)

சர்வானின் சிறப்பான அரைச்சதத்தின் மூலம் இரண்டாவது ஒருநாள் போட்டியில் மேற்கிந்தியதீவுகள் அணி டக் வேத் லூயிஸ் முறையில் 5 விக்கெட்டுக்களால் வெற்றி பெற்றது.

நியூசிலாந்துக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள மேற்கிந்தியதீவுகள் அணி 2 டெஸ்ட், 2 இருபது-20 கிரிக்கெட் மற்றும் 5 ஒருநாள் போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடுகின்றது.

இதில் டெஸ்ட் தொடர் 0:0 என்ற கணக்கிலும் இருபது-20 தொடர் 1:1 என்ற கணக்கில் சமனிலையான நிலையில் ஒருநாள் தொடரின் முதலாவது போட்டி மழை காரணமாக முடிபின்றி ரத்தானது.

இந்நிலையில் இரண்டாவது ஒருநாள் போட்டி நேற்று கிறிஸ்ற் சேர்ஜில் நடைபெற்றது. இப்போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற மேற்கிந்தியதீவுகள் அணி முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது.

இதனடிப்படையில் முதலில் துடுப்பெடுத்தாடிய நியூசிலாந்து அணி 6.5 ஓவர்களில் ஒரு விக்கெட்டையிழந்து 26 ஓட்டங்களை எடுத்திருந்த நிலையில் மழை குறுக்கிட்டதால் ஆட்டம் இடைநிறுத்தப்பட்டது.

தொடர்ந்த மழை காரணமாக ஆட்டம் 4 மணி நேரம் தடைப்பட்டமையால் மழை விட மீண்டும் ஆட்டம் ஆரம்பிக்கப்பட்டபோது டக் வேத் லூயிஸ் முறையில் இரு அணிகளுக்கும் 28 ஓவர்கள் கொண்ட போட்டியாக நடுவர்களால் அறிவிக்கப்பட்டது.

இதனடிப்படையில் தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய நியூசிலாந்து அணி 28 ஓவர்களில் 8 விக்கெட்டுக்களையிழந்து 152 ஓட்டங்களை எடுத்தது.

இதில் ரைடர் 32,எலிஜோற் ஆட்டமிழக்காமல் 30,ஹங் 27 மற்றும் பிளைன் 25 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்துவீச்சில் எட்வோட்ஸ் 3 விக்கெட்டையும் ரெய்லர்,மில்லர் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களையும் ஹயில் ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

பதிலுக்கு டக்வேத் லூயிஸ் முறையில் 28 ஓவர்களில் 158 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் துடுப்பெடுத்தாடிய மேற்கிந்தியதீவுகள் அணி சர்வானின் சிறப்பான அரைச்சதத்தின் மூலம் 275 ஓவர்களில் 5 விக்கெட்டுக்களையிழந்து 158 ஓட்டங்களை எடுத்து வெற்றிபெற்றது.

இதில் ராம் நரேஷ் சர்வான் 65 பந்துகளில் 3 பவுண்டரிகள், ஒருசிக்ஸர் அடங்கலாக 67 ஓட்டங்களும் ராம் டீன் 28 ஓட்டங்களையும் ஆட்டமிழக்காமல் எடுத்ததுடன் ஹயில் 36 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழந்தார்.

பந்துவீச்சில் மில்ஸ்,சௌத்தி,பட்டேல், ஓரம் மற்றும் விக்டோரி ஆகியோர் தலா ஒரு விக்கெட்டை வீழ்த்தினர்.

இவ்வெற்றியின் மூலம் மேற்கிந்தியதீவுகள் அணி 5 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் 1:0 என்ற கணக்கில் முன்னிலை பெற்றது.


மேற்கிந்தியதீவுகள் அணியின் வெற்றிக்கு திருப்புமுனைஅமைத்த ராம் நரேஷ் சர்வான் ஆட்டநாயகனாக தெரிவு செய்யப்பட்டார்.



# புலி பதுங்குவது தீவிரமாகப் பாய்வதற்கே

# 7 நாடுகள் வியூகம் அமைத்தும் பிடித்தது ஆளரவமற்ற கிளிநொச்சியையே

## திராவிடர் கழக வீரமணி வீராவேசம்



கிளிநொச்சியை கைப்பற்றியதாக இலங்கை அரசு அறிவித்திருப்பது தோல்விக்குச் சமமான வெற்றி என்று திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி கருத்துத் தெரிவித்துள்ளார். (நேற்று) மதியம் ஒரு நாளேட்டின் செய்தியாளர் தொலைபேசி வாயிலாக என்னைத் தொடர்பு கொண்டு கிளிநொச்சியை இலங்கை இராணுவம் பிடித்துவிட்டது. இதுபற்றி உங்கள் கருத்து என்னவென்று கேட்டார்.

அதற்குப் பதிலளித்தபோது நான் குறிப்பிட்டேன் அதிகாரப் பூர்வமான செய்தி வரட்டும் அதற்குப் பிறகு அதுபற்றி கருத்து கூறுகிறேன் என்று மிகச் சுருக்கமாகப் பதிலளித்தேன்.

ஈழத்தமிழர்கள் வாழ்வுரிமைக்காகப் போராடுகிறார்கள். வாழ்வா சாவா என்ற அந்த ஜீவ மரணப் போராட்டத்தில் விடுதலைப் புலிகளை ஒழிக்கிறோம் என்ற போர்வையில் தமிழ் இனத்தையே கூண்டோடு, பூண்டோடு அழித்துவிடத் திட்டமிட்டுள்ளது ராஜபக்ஷ அரசு! விடுதலைப் புலிகளின் தலைமையிடமாக இருந்த கிளிநொச்சியைக் கைபற்றி விட்டோம் என்று அறிவித்ததை அதிகார பூர்வமாக புலிகளும் ஒப்புகொண்டுள்ளார்கள்.

இது பற்றிய அவர் தம் இணையதளத்தில், மக்கள் நடமாட்டம் அறவே இல்லாதது கிளிநொச்சி. ஆள் நடமாட்டம் இல்லாமல் கிட்டத்தட்ட ஆவி நகரம் போல் மாறிவிட்ட நகரைத் தான் இராணுவம் கைப்பற்றியுள்ளது. இந்நகரைவிட்டு பொதுமக்கள் எப்போதோ காலி செய்து வடகிழக்குப் பகுதிக்குச் சென்று விட்டனர்.

இங்குள்ள கட்டங்கள் இராணுவத்தின் தொடர் தாக்குதலில் அழிந்துவிட்டன கடுமையான தாக்குதலுக்குப் பிறகும் புலிகள் தரப்பில் உயிரிழப்பு குறைவே என்றும் அச் செய்தி மேலும் தெரிவித்துள்ளது.

முன்னதாக 1996இல் கிளிநொச்சியை இராணுவம் கைப்பற்றியது. அதை1998 பெப்ரவரியில் மீண்டும் புலிகள் கைப்பற்றினர் என்பது பழைய வரலாறு.

சுமார் 7 நாடுகளின்-வல்லரசு நாடுகள் உட்பட வியூகம் வகுத்துதான் ஆள் நடமாட்டமில்லாத சூனியப் பிரதேசமான கிளிநொச்சியை சிங்கள இராணுவம் கைப்பற்றியதாகக் கூறிடும் நிலையில் இது ஒரு தற்காலிகப் பின்னடைவு. ஏற்கனவே புலிகள் தரப்பில் பின் வாங்குதல் என்பது எந்த ஒரு யுத்தத்திலும் வெற்றிகரமான வாபஸ் என்பது பலரும் பயன்படுத்தும் போர்த் தந்திரங்களில் ஒரு பகுதிதான் என்பது உலகறிந்த இரகசியம். யாரும் வசிக்காமல், மக்களும், அவர்களைப் பாதுகாக்கப் போராடும் புலிகளும் கைவிட்ட ஆள் அரவமற்ற பகுதிகளைக் கைப்பற்றிவிட்டது ஒரு தோல்விக்குச் சமமான வெற்றி- இப்படி ஒரு ஆங்கில வாக்கியமுண்டு.

அது போலவே சண்டைகளில் தோற்பதும் உண்டு. ஆனால் அவர்கள் போரில் வெல்லுவோம் என்று உறுதி படைத்த போராளிகளாவார்கள். வாழ்வுரிமைக்குப் போராடும் நிலையில் இலங்கையில் கிளிநொச்சியைப் பிடித்துவிட்டதால் போர் முடிந்து விட்டது என்று அவர்களே கூட ஒப்புக்கொள்ள முடியாத நிலையில்தான் சிங்கள அதிபரும் அதன் தளபதியும் உள்ளனர்

அங்கே நடைபெறும் ஈழத்தமிழர் வாழ்வுரிமைப் போரில் இப்படிப்பல சோதனைகளும் வேதனைகளும் ஏற்பட்டாலும் அதை எதிர் கொள்ளும் துணிவும் நெஞ்சுரமும் உள்ளவர்களாக புலிகள் இன்னமும் உள்ளார்கள்.

புலி பதுங்கினால் மேலும் தீவிரமாகப் பாயும் என்பது தமிழ்ப் பழமொழி. எப்படியாயினும் இடையில் எமது ஈழத் தமிழர்கள் இப்படி குண்டு மழையால் கொல்லப்பட்டு மடிகின்றனரே, எவ்வளவு காலம் இந்த இரத்த ஆறு ஓடவேண்டுமோ?

ஓ...தமிழ்ச் சாதியே உன் நிலைக்கு என்றுதான் விடுதலை? விடியல்? என்றே இதயத்தில் வடியும் இரத்தத் துளிகளையும் துடைத்துக்கொண்டு கேட்கிறோம். விடியாத இரவுகள் இல்லை. முடியாத போர்களும் இல்லை. ஈழத் தமிழரின் சுதந்திர உணர்வுக்குக் கொடுக்கும் விலைகளும் தலைகளும் இப்படி நாளும் பெருகவேண்டுமோ? அய்யகோ!

இன உணர்வு மட்டுமா -மனித நேயம் கூட செத்து சுண்ணாம்பாகி விட்டதா என்று தான் கேட்கத் தோன்றுகிறது.

பத்துத் தடவை பாடை வராது என செத்து மடிய செருகளம் கண்ட போராளிகளுக்காக நாம் வருந்தவில்லை. சாகத் தேவையில்லாத அப்பாவி மக்கள் பிஞ்சுகள் -என்னருந் தமிழ் இனம் இப்படி நாளும் அழிய வேண்டுமா? நியாயம் பேசும் உலகமே நீ ஏன் ஊமையானாய்? என்று அதில் கேள்வி எழுப்பினார் வீரமணி. (ந-5)

### தமிழரின்...

தொடர்பில் கருத்துரைக்கையிலேயே இந்த வலியுறுத்தலை விடுத்துள்ளார்.

அரசாங்கமும் தமிழீழ விடுதலைப் புலிகளும் தமிழர்களின் நியாயபூர்வமான கோரிக்கைகள் தொடர்பில் பேச்சுவார்த்தை நடத்துவதை அமெரிக்கா எதிர்பார்ப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இரண்டு தரப்பினரும் தமக்கிடையிலான கருத்து வேற்றுமைகளை களைந்து அமைதியான தீர்வு ஒன்றை காண முன்வரவேண்டும் என்றும் அதுவே தமிழர்களின் நியாயமான கோரிக்கைக்கு தீர்வைத் தரும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ந-5)

### புலிகளின்...

பொன்சேகா கூறியுள்ளார்.

கொழும்பு ஆங்கில ஊடகம் ஒன்றுக்கு கருத்து தெரிவிக்கையில், வன்னிப் போர்க் களத்தில் ஆட்டிலறி மற்றும் மோட்டார் தாக்குதல்கள் மூலம் எறிகணைகள் மழையாகப் பொழிந்தன.

தொடர்ச்சியான எறிகணைத் தாக்குதல்களில் அதிகாரிகள் உள்ளிட்ட 12 ஆயிரம் படையினர் படுகாயமடைந்துள்ளதையும் நாம் மறந்துவிடக் கூடாது. விடுதலைப் புலிகளுக்கு தொடர்ச்சியான ஆயுத விநியோகம் இருந்தது என்றார் அவர். (ந-5)

### கோட்டையில்...

குண்டு வெடிப்புச் சம்பவம் இடம்பெற்றது என்றும் இது தொடர்பான விசாரணைகள் நடைபெறுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

காயமடைந்தவர்கள் கொழும்பு தேசிய மருத்துவமனையின் விபத்துப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

சம்பவ இடத்தில் படையினர் தேடுதல் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர். குண்டு வெடிப்பை அடுத்து அங்கு வாகன நெரிசலும் ஏற்பட்டுள்ளது. (ந-5)

### உயர்தரப்...

திங்கட்கிழமை விமானம் மூலம் அனுப்பி வைக்கப்படுமென பரீட்சைத் திணைக்களத்தின் உயரதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

எனினும் யாழ்.மாவட்டத்தின் பெறுபேறுகள் கடந்த காலங்களைப்போல் சோபிக்கவில்லையெனத் தெரிவிக்கப்படுகிறது. (ந)

### நாடாளுமன்றக் கலைப்பு...

சியைப் படையினர் கைப்பற் றிய கையோடு நாடாளுமன்றத்தைக் கலைத்துப் பொதுத் தேர்தலை நடத்துவதன் மூலம் சிறிலங்கா சுதந்திரக் கட்சி தனித்து அறுதிப் பெரும்பான்மைப் பலத்தை பெற்றுக்கொள்ளும் என்ற நம்பிக்கையில் இருக்கும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, அடுத்து வரும் சில தினங்களில் நாடாளுமன்றத்தை கலைத்து விடுவார் எனக் கூறப்படுகிறது.

கிளிநொச்சியைக் கைப்பற்றிய வெற்றியோடு ஆனையிறவைக் கைப்பற்றுவதன் மூலம் வெற்றியை இரட்டிப்பாக்க முடியுமென சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் முக்கிய தலைவர்கள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு ஆலோசனை கூறிவருவதாகவும்,

ஆனையிறவு வெற்றிக்காக அதிக நாட்கள் தேவையில்லை என்றும் சில நாட்களில் அது சாத்தியமாகிவிடுமென்றும் படைத் தளபதிகள் ஜனாதிபதிக்கு உறுதி வழங்கியுள்ளதாகவும் கூறப்படுகிறது.

இந்நிலையில் பொதுத் தேர்தலுக்கான திகதியை நிர்ணயிப்பதில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவும், கட்சியின் முக்கியஸ்தர்களும் ஈடுபட்டுள்ளனர்.

பொதுத் தேர்தலுக்கான திகதி நிர்ணயிக்கப்பட்ட கையோடு நாடாளுமன்றம் கலைக்கப்படுமெனவும் அந்த அறிவிப்பு அடுத்து வரும் நள்ளிரவுகளில் எதிர்பார்க்கலாமெனவும் கூறப்படுகிறது.

இது இவ்வாறிருக்க வடக்கு மாகாண சபைக்கான தேர்தலை நடத்துவதிலும் ஜனாதிபதி கவனம் செலுத்துவதாகவும் எதிர்வரும் சுதந்திர தின நிகழ்வில் ஜனாதிபதி வடக்குத் தேர்தல் பற்றி அறிவிப்பார் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (ந)

### ஆனையிறவை நோக்கி...

தெரிவித்துள்ளது.

அதேவேளை முல்லைத்தீவு பகுதியில் நேற்றுக்காலை 6.15 மணியளவிலும் முற்பகல் 10.30 மணியளவிலும் விமானப் படையினர் வான் தாக்குதல் நடத்தியிருப்பதாக தேசிய பாதுகாப்புஊடகநிலையம்அறிவித்துள்ளது.

இனங்காணப்பட்ட விடுதலைப் புலிகளின் இலக்குகள் மீதே இந்தத் தாக்குதல்கள் நடத்தப்பட்டிருப்பதாக அந்த நிலையம் தெரிவித்துள்ளது.

இதேவேளை ஆனையிறவுப் பகுதியில் இருந்து விடுதலைப் புலிகள் வெளியேறி வருவதாக ஆங்கில இணையத்தளமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

ஆனையிறவிற்கு அண்மையில் பரந்தன் இருப்பதால் இராணுவத்தின் 58-வது படைப்பிரிவு ஆனையிறவை நோக்கி முன் நகர்வதாகவும் இராணுவத்தினர் ஆனையிறவின் தென்பகுதியில் இருந்து 2 கிலோமீற்றர் தூரத்தில் நிலைகொண்டிருப்பதாகவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

விடுதலைப் புலிகள் ஆனையிறவில் இருந்து வெளியேறி வரும் நிலையில் தைப் பொங்கலுக்கு முன்னர் முகமாலை, கிளாலி, முல்லைத்தீவு, ஒட்டிசுட்டான் மற்றும் வற்றாப்பளை ஆகிய பகுதிகளை இராணுவத்தினர் மீட்டு விடுவார்கள் எனவும் அந்த இணையத் தளம் தெரிவித்துள்ளது.

எனினும் வன்னிக்களமுனையில் நடைபெற்றுவரும் மோதல்கள் தொடர்பில் விடுதலைப் புலிகளின் கருத்துக்கள் எதுவும் இதுவரை வெளியாகவில்லை. (ந-5)

## வன்னிப் போரை அடுத்து புலிகள்...

கிளிநொச்சியை இலங்கை இராணுவத்தினர் கைப்பற்றிய பின்னர் இந்தியப் புலனாய்வுத்துறையினர் பல்வேறு கோணங்களில் தங்களின் கருத்தை வெளியிட்டுள்ளனர். அதன் விபரம் வருமாறு,

இலங்கையில் விடுதலைப் புலிகளுக்கும் இராணுவத்திற்கும் இடையே நடைபெற்று வரும் போரை இந்தியா உன்னிப்பாக கவனித்து வருகிறது. இந்திய உளவுத்துறை தீவிர கண்காணிப்பில் ஈடுபட்டுள்ளது.

தற்போது விடுதலைப் புலிகளின் தலைநகராக செயற்பட்ட கிளிநொச்சியை இலங்கை இராணுவம் கைப்பற்றியுள்ளது.

கிளிநொச்சியை நோக்கி இராணுவம் முன்னேறத் தொடங்கியதுமே முன் எச்சரிக்கையாக விடுதலைப் புலிகளின் தலைமையகம் முல்லைத்தீவு பகுதிக்கு மாற்றப் பட்டுவிட்டது.

கிளிநொச்சியை கைப்பற்றிய இராணுவம் முல்லைத்தீவு நோக்கி நகர்ந்து வருகிறது. இலங்கை இராணுவத்தின் கடும் சண்டை, குண்டு வீச்சுக் காரணமாக விடுதலைப் புலிகள் தங்கள் இருப்பிடங்களை வேறு இரகசிய இடங்களுக்கு மாற்றி வருகிறார்கள்.

அவர்கள் தமிழ்நாட்டுக்குள் ஊடுருவும் அபாயம் இருப்பதாக இந்திய உளவுத்துறை எச்சரிக்கை விடுத்துள்ளது.

இலங்கையில் விடுதலைப் புலிகள், தங்கள் கைவசமிருந்த இடங்களை தொடர்ந்து இராணுவத்திடம் இழந்து வருவதால் அவர்கள் தமிழகத்திற்கு தப்பிவரும் வாய்ப்பு உள்ளது. இதை உளவுத்துறை உன்னிப்பாக கவனித்து வருகிறது.

விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனின் இருப்பிடத்திற்கு இராணுவம் குறிவைத்துள்ளது. அவரை எப்படியாவது பிடித்துவிட வேண்டும் என்று இராணுவம் குண்டுவீசி தாக்குதல் நடத்தி வருகிறது.

ஒரு வேளை இராணுவம் நெருங்கிவிட்டால்பிரபாகரன் இலங்கை இராணுவத்திடம் சரண டையமாட்டார். அவர் தென்னாபிரிக்காவுக்கு தப்பிச் செல்லும் வாய்ப்பு இருப்பதாக உளவுத்துறை அதிகாரி ஒருவர் கூறினார்.

தென்னாபிரிக்காவில் இலங்கைத் தமிழர்கள் ஏராளமான அளவில் வசிக்கிறார்கள். அவர்கள் பிரபாகரனுக்கு அடைக்கலம் தரலாம் என்று உளவுத்துறை தெரிவித்துள்ளது.

விடுதலைப்புலிகளுக்கு இராணுவம் நெருக்குதல் கொடுத்துவருவதால் அவர்கள் இலங்கையின் கிழக்குப் பகுதியில் ஊடுருவலாம். அங்கு கருணா ஆதரவாளர்கள் ஆதரவுடன் அரசு செயல்பட்டுவருகிறது.

எனவே அங்கு விடுதலைப் புலிகள் பதில் தாக்குதலில் ஈடுபடக் கூடும் என்று தகவல் வெளியாகியுள்ளது. இவை முடியாவிட்டால் கடைசியாக தமிழகத்திற்குள் விடுதலைப் புலிகள் கடல்மார்க்கமாக ஊடுருவலாம்.

ஏற்கனவே இலங்கையில் இருந்து ஏராளமான தமிழர்கள் அகதிகளாக தமிழகத்திற்கு வந்தவண்ணமாக உள்ளனர். அகதிகள் போர்வையில் ஊடுருவும் வாய்ப்பு உள்ளது.

தமிழகத்தில் விடுதலைப் புலிகள் தீவிரவாத செயல்களில் செயற்படமாட்டார்கள் என்றாலும் மறைமுகமாக பல்வேறு நடவடிக்கைகளில் ஈடுபடக் கூடும் என்றும் உளவுத்துறை தெரிவித்துள்ளது.

இதையடுத்து தமிழக கடலோர மாவட்டங்களில் கடலோரப் பாதுகாப்புப் படையும், இந்திய கடற்படையும் உசார் படுத்தப்பட்டுள்ளன. (ந-5)

24 கணிதப் பரீட்சையா?
DMI
நாவலர் வீதி, யாழ். ஸ்ரான்லி வீதி, யாழ்.
A/L-2011 ஜனவரி - 10 காலை 9.00 மணி
Free
ஜனவரி 10 முதல் 24வரை சனி, ஞாயிறு தினங்களில் A/L வகுப்புக்கள் முடிவடைந்ததிலிருந்து 2 மணி நேரம் கணிதக் கருத்தரங்கு DMI யினால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

CB Computer Academy
Station Road, Kondavil. 021-4590291
விளம்பரப்பலகை
புதிய பிரிவுகள் ஆரம்பம்
Computerized Accounting, DTP
ICT (Grade 10 & 11), GIT (A/L)
Ms Office, Internet and E-Mail
VB.NET, Java, C++ Programing
சலுகைக்கட்டண விபரங்களை அறியவும் பொருத்தமான நேரத்தைத் தெரிவு செய்யவும் உடனே எமது அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளுங்கள்.
Station Road, Kondavil. 021-4590291

Maths Centre M.M.V. Road, Nelliady
வடமராட்சியின் முன்னணி ஆசிரியர்களின் ஒன்றிணைந்த சேவையில்
A/L - 2011
★ கலை,வர்த்தக பிரிவுகள் வழமையான ஆசிரியர் குழுவுடன்
அரசியல் விஞ்ஞானம் - திருச்செந்தூரன்
ICT - பிரபல ஆசிரியர்
ஆரம்பம்- 05.01.2009 திங்கள் A.M.-7.30
(C-1944)

இப் பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3, 2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 04.01.2009 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.